ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# திருமெய்யம் பெருமாள் கோவில்,

# ஸ்தலபுராணக் கீர்த்தனை.



TAMIL NADU ARCHIVES
LIBRARY
10 APR 1975
MADRAS-8

1819

ACL-TNAL
02009

38.21146
N30
4321

காரைக்குடி

பாஸ்கரன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பெற்றது.

1930.

LIBRARY SERVICE INDIA
KOTTAIYUR-623106.
TAMILNADU. INDIA.

1219

TAMIL NADU ARCHIVES
LIBRARY
10 APR 1975
MADRAS-8

LIBRARY SERVICE INDIA
KOTTAIYUR-623106.

TAMIL NADU ARCHIVES LIBRARY
ACC. 4321
9 DEC 1978
EGMORE, MADRAS-600 008

Q22:38.21196
N80

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருமெய்யம் பெருமாள் கோவில்.

# ஸ்தலபுராணக் கீர்த்தனை;

பூர்வம் வடமொழியாயிருந்ததை மொழி பெயர்த்துத் திராவிடத்தில் வடமொழிப்பதங்களுஞ் சேர்த்து விருத்தங்கள் கீர்த்தனங்களாய்ச் செய்யவேண்டுமென்று திருமெய்யம் ஸ்தலத்திலுள்ள பெரியோர்கள் கேட்டுக் கொண்டபடி

புதுக்கோட்டை சமஸ்தானம்

திருமெய்யந் தாலூகா ராயவரத்திலிருக்கும்

திருவிளையாடல் கீர்த்தனஞ்செய்த

மழவை

**சுப்பிரமணிய பாரதியவர்கள்**

இயற்றியது.

இஃது

காரைக்குடியிலிருக்கும் வைரவன்கோவில் சோளசிங்கவளநாடாகிய யேழகைப்பெருந்திருவான வீரபாண்டியபுரத்தில் சிறுகுளத்தூருடையான்,

**தெய்வனைசெட்டியார் புத்திரர்**

மகா-ா-ாஸ்ரீ கருப்பஞ்செட்டியார்அவர்கள், ஷெயார் தம்பி

**அருணசலஞ்செட்டியார் புத்திரர்**

**ராமசாமி செட்டியாரவர்கள்**

அரங்கேற்றிவைத்து முதல் பதிப்பு பதிப்பித்தும் இந்நூலாசிரியருடைய பௌத்திரனும் சுப்பராமய்யருடைய குமாரனுமான இராயபுரத்திவிருக்கும் திரு. சு. சு. கிருஷ்ணய்யருடைய முயற்சியாலும் சிலர் வேண்டுகோளின்படி காரைக்குடி க. தெ. க. கருப்பஞ்செட்டியார் புத்திரன் அளகப்பசெட்டியாரவர்களுடையபௌத்திரனும் ராமசாமிசெட்டியார் புத்திரனுமாகிய கருப்பஞ்செட்டியாரவர்களாலும் ஷெ அளகப்பசெட்டியார் புத்திரன் பெருமாளென்ற அளகப்ப செட்டியார் அவர்களாலும்.

**இரண்டாவது பதிப்பாக**

காரைக்குடி

பாஸ்கரன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது.

1930.

LIBRARY SERVICE INDIA
KOTTAIYUR-623106.

ARCHIVES ... LIBRARY
4321

# சாற்றுக்கவிகள்

புவனைக வீரபாண்டியபுர மென்னும்.
மழவை-அஷ்டாவதானம்
சுப்பராமையர் கனிஷ்டர்
சிதம்பரபாரதிகளியற்றியது

விருத்தம்.

அகத்யமாதியைப்பொருந்து மகத்துவமேமிகுத்துமுன்னீ ரதைப்பானிக்
அகத்யமாமுனிக்கிணைநம் மழவைநகர்ச்சுப்பிரமண்ய வமலன் சாந்தம்[கும்
அகத்யமாகமுட்டும்வரைத் திருமெய்யர்பதங்களைக்கண்டானந்திக்க
அகத்யமாம்பதங்களைப்பா வினத்தொடுசொற்றனன்கவலை யகற்றிமா
[தோ.

காரைக்குடி-சதாவதானம்
வால சுப்பிரமணியஐயரவர்களியற்றியது.

ஆசிரியப்பா

திருமாதிலகு செங்கையுந்தாளு, மொருவாண்முகமு முந்தியுங் கருணை, வழியும்விழியும் மரையாச்சங்கர், தழீஇக்கொடுநேமி தனைத்தினந்தாங்குங், கருங்கடலதனைக் கலத்தற்பொருட்டுப், பெருந்தவப்பயனுற் பிறழ்தாவின்றி, யென்றும்பழக வியைதலைமானத், துன்றுசெந்தாமரை தோறுமனத்தோ, டிருந்திடவாங்குற் றொழுமனத்தொகுதி, கருஞ்செழும் பவளக் காம்புடைத்தான, கவரியிரட்டல்போற் காட்டவுமிழையால், நவ நவமாக நயந்தரும்வெள்ளைச், சோமனைவானிற் சுழற்றல்போற்காட்டவும், காமினிதளித்த நங்கைகோரிக்கை, பலித்தமோவென்னப் பாற்கடலும்பர் நிலைத்திதுவலிய நேருமென்றுளத்தி, லுன்னிமேற்பொங்கல்போ லுயர் விற்காட்டவும், இன்னணமாக வினயந்தபல்வளங்கள், நிறைந்திமலைப் பானின்றிவண்வந்த, அறந்திகழ்தரும்பேராலத்தருவும், பாங்குயர்புஷ்ப பத்ராநதியுந், தாங்கிச்சைவலந் தன்னையுந்தழுவி, ஆழமுன்னீரி னரிதாய்த் துறையில், வேழம்வந்திறங்கும் விரிவாய்ப்புனலிற், சலசலசலவெனச் சல சரமனைத்து, மலகிலாவிளையாட்டயர்ந்திடநன்கு,தெளிந்து குளிர்ந்துசெந் தேனினுப்ருசித்து, மிளிர்ந்தருநற்றவர் வினைபொலாமோட்டுஞ், சத்தியத் தடமுஞ் சத்தியமூர்த்தியுஞ், சத்தியத்தலமுஞ் சத்தியகிரியுஞ், சத்தியவனமுஞ் சத்தியமுனியும், நித்தியமாக நிலைத்துமாண்மியங்க, ளளவிலாத மைந்தோருமெய்த்தெய்வம், புளதிபன்முதகிற் பொலிந்தோனுறங்கும், பாயரண்கிரணம் பரப்பியதிங்கள், தாபகீழ்த்திசையிற் சூரியன்வருமுன், வருமருணனுக்கு மகிழ்துணையான, பெருவலிக்கலுழன் பிரகிலாமெய்ம் முனி, தட்சகன்புரூருவச்சக்கரவர்த்தி, பட்சப்வைத்தெவரையும் பாதுகாக்கு, மித்திரந்யும்னனிவ் வெண்மருந்தனித்தனி, யந்தியுங்காலையு மாங்குற்றருச்சனை, பண்ணப்பெருமை படர்ந்ததிரண்ட, புண்ணியவடிவாம்

பூதரஞ்சாளிக், கிராமமேபோலக் கிளர்ந்தடியார்பவ, மிராமநற்றடைக்கு
மியல்புடைத்தான, திருமெயமென்னுந் திருத்தலபுராண, வரலாறதனை
வரன்முறையாக, நாடகப்பாவா னவிலுமென்றன்பு, கூடிவயிரவன் கோவிற்
சேரள, வாழ்வுயர்சிங்கவளநாடான, வேழகைப்பெருந்திரு வென்னும்வீர,
பாண்டியபுரத்திற் படர்சிறுகுளத்தூர், ஆண்டிடுந்தெய்வ ஞானபேருள்
ளான், வணிகருக்குறிய வர்த்தகத்தொழிலைத், துணிவொடுபுரிந்து துகள
றுஞ்செல்வ, மீட்டியதுரையினி தீன்றமாமதலை, நாட்டிடையெவர்க்கு
நல்லவன்பகரு, மித்தலத்தும்புகழேந்திசலஞ்சா, லெத்தலத்தும்பய னெஞ்
சாத்தருமப், பயிரைவிருத்தி பண்ணுமேவானெஞ்சுள், வயிரமிலாதான்
மலர்க்கரவிரலின், மட்டடங்காத வயிரமுமுள்ளான், எட்டிலக்குமியு மிசை
ந்ததிண்டோளான், அருணாசலவேட் கண்ணனுயர்ந்த, வருணாசிரியன்
வழுத்தனுக்கிரகத்தா, லடியடிவாழை யாகப்புதல்வர், படியின்மேற்றழை
த்த பாக்கியனினித்த, வாசகன்றீர்க்க வயதுளான்வந்த, யாசகர்க்கிரங்கி
யிலையவனைகொடுத்தோன், காரைமாநகர்க்கிரு கண்ணிவனென்றே, யாரும்
புகழ விருந்ததியாகி, யெனுங்கருப்பேந்திர னிசைந்துகேட்ப, முனீந்திர
னார்க்கு முதிர்பழியொழித்த, வரிதாந்திருவிளை யாடன்முதலா, விரிவாய்
விளங்கும் விளையாட்டறுபா, னாலையுமதற்கு நாயகனான, வாலையையொரு
பால் வைத்தவன்மகிழப், பதமும் விருத்தமும் பண்ணிபதேபோ, லுதை
யமூர்த்தியென் றுத்தமமறையோன், றனையனஞ்சுந் தரவிப்ரேந்த்ரன்
மனமகிழ்சுதனா வந்தவனந்தக், கரணமெய்யடியர் கழல்புனையுபய, சரண
மேல்வைத்துச் சனனமுந்தவிர்ந்தோன். ஆசுமுதலா வகன்றநாற்கவிகள்,
யோசனையின்றி யுரைக்குமாவாக்கி, கள்ளவராற்செழுங் கன்றுங்கயலும்,
வெள்ளம்வருங்கால் விண்ணிடைத்தாவிக், கரையிருமருங்குங் கலந்து
மேனிவந்து, தரையிற்பேய்க்கொளுந் தையலர்போலத், தலைவிரித்தாடுந்
தரத்ததாந்தெங்கின், குலையொடித்திடவக் குலைவளர்தோற்ற, மாயை
யால்விண்ணின் மறைந்துபோர்புரியுந், தீயவிராவணன் செம்பயிர்த்
தலைகள், இராகவனம்பா லிம்மண்டலத்தில், ஞெரேலெனவீழ்ந்திடு நேர்
மையைக்காட்டு, மிப்படிவிசித்திர மெண்ணிலாதமைந்து, கற்பினனுயர்
வே கவதியின்மேல்பால், வாழையுங்கொய்யா மரமுங்கமுகும், மாழையும்
பலாவும் வயலைச்சூழ்ந்து, மதுவைப்பொழியும் வளத்தாற்பயிர்க, ளதிகச்
செழிப்படைந் தம்மணிபிடித்து, வான்மிசை நிமிர்ந்து வணங்குதல்கல்வி,
மேன்மையிற்சிறந்தோர் வீற்றிருக்கின்ற, பதியிதுவென்னப் பயந்ததே
போலு, மதியங்காட்டு மாளிகைப்பதிக்கு, நிகராச்செல்வநிறைந்திடுமழவை
நகராதிபன்மறை நாலிலும்வல்லோன், இலக்கியவிலக்கண மெலாமுணர்ந்
தவையைக், கலக்குநாவலர் கண்டுளங்களிப்பத், தந்துவினிடையே தர
ளமும்பவளமும், பந்தியிற்கோத்த பான்மையேபோலக், கீதத்திடையே
கிருவிருத்தமுஞ், சீதப்பதமுஞ், சேர்த்தொரு மாலையைச், சுப்பிரமணி
யச் சுகுணன், அற்புதமாச்செய் தரங்கேற்றினனே.

விருத்தம்.

உவமையில்லாத்தீத்தமுதல்மூன்றுவிசேஷமும்மெய்மையொன்றேசார்ந்த
தெவனுளதென்றாராய்ந்து திருமெய்யமென்றுளத்தோர்ந் திதுநமக்குப்
புவனமிசைவிருத்தமின்றிப் பதமளிக்குமெனமழவைப் புரியில்வாழுந்
தவவடிவாம்சுப்ரமண்ய பூசுரன்கீர்த்தனமதாய்ச் சாற்றினனே.

வேம்பத்தூரில்
கவிராஜபண்டிதர் வம்சோத்பவராகிய
முத்துவேங்கட சுப்பய்யர் புத்திரர்

## சுப்பிரமணிய பாரதிகளியற்றியது.

விருத்தம்.

கொண்டல்படிந்திலகுஸத்ய கிரிநாதன்றனிப்புகழைக் குவலயத்தில்
வண்டமிடேர்மழவைநகர்ச்சுப்ரமண்யனெனுமறையோன்மகிழ்துநோக்கி
பண்டுமெதுரேசரது திருவிளையாடற்சரிதை பகர்ந்தாற்போலத் [ப்
தெண்டிரைசூழ்புவிப்புலவர் திவிப்புலவர்செவிக்கமுதாய்ச் செப்பினனே.

உ

சிவமயம்.

தேவிதுணை.

இஃது

அகத்தியான்பள்ளி இராமசேஷய்யர் அவர்கள் குமாரனும்
தேத்தாகுடி முதல்தர ஆரம்பபாடசாலை மானேஜருமாகிய
வயித்தியநாதசர்மாவினால் இயற்றப்பெற்றது.

சத்திய கிரியென் றிப்பூ தலத்துறு திருமெய் யத்து
ணித்தியன் சத்ய மூர்த்திநெடியமான் மான்மியத்தைப்
பத்திகீர்த் தனமாச் செய்தான் பாரதி மழவை வாச
நத்திய சுப்ர மண்ய நாவலன் மறையோன் றனே. (க)

கீர்த்தனை யாகச் சத்ய கிரிப்பெரு மாள்புராணம்
பார்த்தது மச்சி யற்றிப் பார்த்தவர்முன்னங் காரைச்
சீர்த்திமான் றெயினன் பெற்ற சேய்கருப்பண்ண வன்பி
னார்த்தசோ தரன்கு மார னன்புறு மிராம சாமி (உ)

இவர்கள்புத்தகமாக் கண்ட திப்புவி யெங்குஞ் சென்ற
தெவருநன் கறிய விப்போ திருப்பினி லில்லை யேயென்
றவனிசீ ரோங்குஞ் செல்வ வந்தணன் றமிழில் வல்லோன்
பவமறு மிந்நூற் பாடும் பாரதி தனக்குப் பேரன் (ங)

கிருட்டிண னென்ற நாமங் கிளர்மறையோன் முயற்சி
யருட்டிற மாலினாலே யவனியிற்காணவெண்ணித்
தெருட்டிற மறியமுன்னச் சிட்டவக் குலத்தோரான
பொருட்டிற மேவுங் காரைப் புண்ணிய சீலராகும். (ச)

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.



திருமெய்யம் பெருமாள்கோவில்

# ஸ்தலபுராணக் கீர்த்தனை.

## கடவுள் வணக்கம்.

### விஷ்வக்ஸேனர் துதி.

விநாயகர் ஸ்தோத்திரமாகவும் அர்த்தமாகும்.

விருத்தம்.

கடற்பெருமை திருமெய்யத் தொருமெய்யத் தனிமுதலைக் கருதிப் போற்றப்
படத்தரவ முரியான்கோ பாலனருள் முதல்வன்நம் பதுமபாதன்
திடத்துயரு மத்திமுன்ன னனந்தரமோ தகத்தத்தன் றிசையோர்போற்ற
வடக்குகர வெண்கோட்டஞ் சக்கரன்வி நாயகன்சே னையர்கோன் காப்பாம்.

### ஸ்ரீ ராமஸ் துதி.

P.38 21146 N30

விருத்தம்.

ஆலிலையத்தியிலைபுன்று கத்திலையின்றுயில்விட்
டயோத்தியினிலர சினிலைச் சேயாய்க்காயாமெய்
மாலுறு மாவிலைமுறித்தம் மாமலர்க்கொம்பினையே
மணந்துமரவுரிதரித்து வனமுற்றுமகிழ்வாய்ச்
சிலமுறு காய்கனிக ளருந்தியவானரத்தின்
சேர்க்கையின் மராமரங்க ளேழொடுமுற்றகரு
வேலையெய்துமாக்கனியை மீட்டுப்பூவரசாய்
விளங்குவனமாலையன்றன் மிலைந்திடுமென்முடியே.

## கிர்ஷ்ணஸ்துதி.

### விருத்தம்.

கண்ணனையத் தளவநகைக் கருவிழிச்செவ் விதழ்வதனக் கமல மின்னார்
கண்ணனைய மொழிந்திரப்பக் கலைகவர்ந்து கடம்புலவு கடவுளிப்பார்க்
கண்ணனைய வுயிர்க்குயிராய்க் கலந்தளித்துக் களித்துநின்ற கருணை வெள்ளக்
கண்ணனைமெய் யாசலத்திற் கண்டுயில் வானைக்கோனைக் கருது வாமே.

## உய்யவந்த நாச்சியார் ஸ்துதி.

அங்கமலை யுற்றவன்றோ ளவணைமலை யக்களிக்கு மருள்மால் மெய்யத்
தங்கமலை யிணைந்தவடத் தரளமலை தனத்தாள்ஸ்ரீ தனத்தாள் செல்வம்
பொங்கமலை யாதபடி புணர்த்துமலை யாழியினிற் பொலிந்துபூத்த
செங்கமலை வெண்கமலை நீலமலை உய்யவந்தாள் செந்தாள் காப்பே.

## ஆழ்வார்கள் ஸ்துதி.

சக்கரத்தாழ் வார்கடலிற் றனித்தரங்கத் துயரலைப்பத் தவித்து மாணார்
சக்கரத்தாழ் வார்மூடச் சங்கமகல் மெய்யபுரி தன்னிற் றானே
சக்கரத்தாழ் வாருயிருந் தானாக வருள்மெய்யன் றன் புகழ்க்குச்
சக்கரத்தாழ் வாராழ்வா ராழ்வார்க ளோர்பதின்மர் தாள்தாழ் வேனே.

## ஸத்தியமூர்த்திப் பெருமாள் ஸ்துதி.

### கீர்த்தனம்.

ஸ்ரீராகம்—ரூபக—தாளம்.

பல்லவி.

கருணாலய தருணாருண கமலதள நயனா.

அநுபல்லவி.

கருடத்வஜ கேசவஜககர்த்தவ்யப் பிரதாபா . அரி — கருணா

சரணங்கள்.

பராத்பரஸ்ரீ தராகிகில சராசர நிரந்தரா
உரகாத்புத சயனா நந்த
கிரணா பரணா சரணா சிருதஜன பரிபாலனா — கருணா
ஸதாஸுர பூஜிதாஸுகுண உதாரகண துரந்தரா
மதராக்ஷஸதல பலாந்தகா
இதநாரதஸேவித மாதவவரதாயகா — கருணா
கனவேணுவனதிவ்ய தர்சனநிகமவந்திதா
அனகாஸத்யபுர ஸுதந்தரா
வனஜானனசோபன ஸ்ரீ வஸுதாதிபவரசோபித — கருணா

---

## புராண வரலாறு.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

பாராசாருளும்வியாஸர் பாலுறுசூதர்தேர்ந்த
புராணமுவ்வாறுள்யாவும் புகழ்ந்திடுபிர்ம்மாண்டத்தி
லாரவளர்துயிலான் மெய்யத் தரும்புகழ்நாரதர்க்குத்
தாரதரமறியமுக்கட் சங்கரனுரைத்ததாமால்.
அவ்வடநூல்வியப்பை யந்தணர் சிலர்தான்காண்பா
ரிவ்வவனியினில்யாரு மெளிதினில றியவேண்டிச்
செவ்வழித் திராவடத்தாற் செப்பெனமெய்யமுற்று
வொவ்வுறுமறையோர்கூற வோதினனுகந்துமாதோ.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

உகப்புளகிரந்தமதைத் திராவிடத்தா
லுரைக்கவருபயனேதென் றுணரிலோங்குஞ்
சகத்தினிலுயராழ்வார்கள் நால்வேதத்தைச்
சாற்றுதிருவாய்மொழிப் பிரபந்தத்திற்கு
மிகஸ்துதிக்குமூவர்கள்தே வாரத்திற்கும்
விரைந்தருள்செய்தேமாலு மரனும்பின்சென்
றகத்துயர்தீர்த்தாரிருவர் தமிழ்க்கிரங்கி
யதுபோலுமென்றனையாண் டருள்வாரென்றே.
எண்டகுமாரியமுந்திரா விடமுஞ்சேர்த்தே
யிசைத்தவிருத்தமெழுபத்தி ரண்டிரண்டு
கொண்டகலித்துறைகீர்த்தனம் அறுபான்மூன்று
கூறுகவிதைகளாக நூற்றிநாற்பானே
அண்டர்பதிக்கிணையான தென்கோடிநகரம்
அதிலுயர் ஹிஸ்யெக்ஸலென்ஸி மகராஜாபாதர்
தொண்டமானிராமசந்தி ரேந்திரமகராஜன்
றுரைத்தனமாநிதியொடு சுபம்பெறவோதியதே.

---

## அவையடக்கம்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

ஓதியமேலோர்முன்ன முரைக்குமென் புன்சொலன்னள்
நீதியினாசாள்வேந்தர் நீதத்தைவேஷமாக்கள்
மேதினிவியப்பக்காட்டும் விதமிதாமேலோர்கொள்வர்
ஆதியன்காதையீதென் றரும்பிழைபொறுப்பீர் நீரே.

பதம் பரசுராகம் ஆதிதாளம்:

பிழைபொறுப்பீரே பெருங்கவியோரே,

அநுபல்லவி.

மழைநிறத் திருமெய்ய மால்புகழ்ஸ்துதிசெய்ய பிழை

சரணங்கள்.

பழுத்தமறையுமின்னம் பகரவறியாதென்ன
வழுத்தியிருக்கச்சின்ன மதியினூலேசொன்ன பிழை
குன்றுப்பிரவிசிந்தக் கோணக்கோணக்கோவிந்தா
வென்றாகிலுஞ் சொல்வர்தா லேபோதுமெனக்கிந்தப் பிழை
உதிருநெல்லுமிப்போக்கி யுணவாந்தண் டுலமாக்கி
யதுபோலெனதுவாக்கின் அரிநாமத்தைநோக்கிப் பிழை

## தோடயம்.

நாட்டை இராகம்-ஜம்பைதாளம்.

பல்லவி.

ஜயஜயா.

சரணங்கள்.

ஜய ஸத்யகிரிவாஸ-சேஷசயன உல்லாச
நயகுணபவமோச-நாரிஷிகேசா ஜயஜயா
ஸ்திரசுந்தரப்பிரதாப-திவ்வியமங்களரூப
அரவிந்தபதபாப-ஹரபத்மநாபா ஜயஜயா
ஸர்வலோகசரண்ய-தைர்யபாபஹிரண்ய
கெர்வநாசனபுண்ய-கீர்த்தனகெண்ய ஜயஜயா
சாதுர்யஹிதலோல-ஸரஸசோபனஜால
மாதுர்யபரிபால-வசனனுகூலா ஜயஜயா

---

## மங்களம்.

இராகம் - சுருட்டி - தாளம் - சாப்பு.

பல்லவி.

மங்களம்-மங்களம்-ஜயஜய-மங்களம்-மங்களம்.

சரணங்கள்.

மங்களம் வரதரங்க ஸாகர புஜங்கராஜ ஸாகசயன
சங்கசக்ர கதசார்ங்ககட்க தரதுங்கஹஸ்த அப்ஜநயன மங்களம்
கோபவேஷ பத்மநாப நீரஜனபாபமோசன வுதாரா
பூபசோபித பிரதாபசோபன ஸ்வரூப லாவண்யாவதாரா மங்களம்
கோராரக சம்சாரகாரக விகாரமாரகா பாரா
வாரஜன்மஹத சோரராவண ஸம்ஹார தீரரகுவீரா மங்களம்
பக்தமுக்தபரி சுத்தஸத்வகுண தத்வவித்வஜன கீதா
நித்யமித்திரவா கிர்த்ய பிர்த்யஜன-ஸ்துத்யஸத்யகிரி நாதா மங்களம்

## உமாமகேசுவர நாரத ஸம்வாதம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY ACC 4321. 9 DEC 1978 EGMORE, MADRAS-600 008

விருத்தம்.

ஸ்ரீமகாகைலாச கிரியில்பிர்ம்ம
தேவர் இந்திரன் விபுதர்மா தவர்திக்பாலர்
நேமகின்னரர் கருடர் சித்தர்ஸாத்யர்
நிஜவித்யாதரர் உரகர் நிறைந்து சூழ்ந்து
வாமகெவுரீசரைத் தரிசித்தேத்திப் போற்றி
வரங்கள்வேண்டியது பெற்றுமகிழ்ந்துசென்றார்
நாமபாராயண நாரதர்வீணைகா
னம்செய்தா ரருள்பெருஸ்துத்யம் செய்தாரே.

பதம்-இராகம் சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

ரக்ஷ ரக்ஷஹர-ஹரஜகதீசா நிசஸ்வயம்பிரகாசா

அநுபல்லவி.

தக்ஷயாகஹத-ஸரஜிஸயுகபத — ரக்ஷ

சரணங்கள்.

சிதபரஸார ஜகதாதார-ஸஜ்ஜநஸேவித சாக்ஷாத்கார — ரக்ஷ
ஜயகோபால தீனகிர்பாள
பயபவமோசன பரமசுசீல — ரக்ஷ
ஸுரகணஸேவ்ய ஸுகிர்தஸ்வரூபா
வரதபக்தஹித மகானுபாவா. — ரக்ஷ

விருத்தம்.

ஸ்துதிசெய்நாரதர்ஓங்கார ஸ்வரூபமாய்ப் பன்னிரெண்டாம்
விதிகொளக்ஷரமந்திரத்தை விளம்பியே ஸ்துதிக்கும்மேலாம்
பதியேஸ்ரீரெங்கமென்றீர் பகர்அஷ்டாக்ஷர மந்திரத்தால்
கதிபெறுஸ்தலமெங்குண்டு கருணைசெய்தரு ளென்றாரே.

பதம் ஸ்ரீராகம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

அஷ்டாக்ஷரஞ்செபித் தருள்பெறும் ஸ்தலம்யாது

அநுபல்லவி.

இஷ்டமுனிவர்தேவர் யெவருக்கும்புவிமீது அஷ்டாக்ஷர

சரணங்கள்.

அந்தமிகுந்திடும்-வை-குந்தம்முதலதாயு
கந்தஸ்தலங்களிலு-யர்ந்த கதியருளும் — அஷ்டாக்ஷர

# திருமெய்யம் பெருமாள் கோவில்

எஸ்தலங்களிலுமே யுத்தமதரமாகி
நித்யம்முகுந்தன்சா-நித்தியம்செய்பதிகளில் அஷ்டாக்ஷர
பேராயிரங்களைப்-பாராயணஞ்செய்து
நேராய்த்தவம்பெறும்-சீராம்பதிகளில் அஷ்டாக்ஷர

விருத்தம்.

முனியிவைவேண்டவேத முதல்வனுள் மகிழ்ந்துநல்ல
தனியதாம் ஸமயம்பார்த்துச் சாற்றினைரகஸ்யமீது
இனியிவைவுன்னல்யாரு மெளிதினில்ப்பெற யிச்சித்தாய்
புனிதமாமிதனையின்று புகலுவோம் கேளென்றாரே.

பதம்-இராகம்-தன்யாசி-ஆதிதாளம்.

பல்லவி.

திவ்விபதேசங்களிதுவே-ஹரிக்ஷேத்திரங்களிற் சிறந்ததுவே

அநுபல்லவி.

பவ்வியமாகயிஹ பரபலன்தரு மகா திவ்விய

சரணங்கள்.

ஸத்தியசைலம்கோஷ்ட புரம்கிர்ஷ்ணக்ஷேத்திரம்
ஸாளக்கிராமம் னைமிசம்பதரி
அஸ்திசைலம் விர்ஷபாசலம் குரங்ககம்
அனந்தசயனம் மோகினிபுரம் சுவேதகிரி திவ்விய
அரிக்ஷேத்திரம் சித்திரகூடம் லக்ஷ்மிபுரம்
ஐந்திரகம் புருஷோத்தமம் சேஷாத்திரி
குருக்ஷேத்திரம்கர்னி கைவாருணம்கும்ப
கோணம்மாதவக்ஷேத்திரம் மதுராபுரி திவ்விய
தரைபுகழ்புல்லா ரணியமனிந்தாக்கியம்
ஸாரக்ஷேத்திரமுட னேகடிகாசலம்
அறையுமிருபத்தெட் டாகுமஷ்டாக்ஷர
அரிதன்மந்திரத்தா லர்ச்சித்தேத்தும்ஸ்தலம் திவ்விய

விருத்தம்.

மந்திராஷ்டாக்ஷரத்தாலர்ச் சிக்கும்புண்ணிய
மகாஸ்தலங்களிதுவென நாரதர்மகிழ்ந்து
சந்திரசேகராஹரஸர் வஞ்யனீரே
சாற்றியஇஸ்தலங்களி லுத்தமம்யாதிங்கு
வந்திருந்து தவம்புரிவோர்க்கிகபரம்தா
மவியாமற்றேன் றிநெடு மாயனன்பாய்த்
தந்துரக்ஷிக்கும்ஸ்தலம்யா தென்னமாறுத்
தரம்சொல்வார்மதியணிசங் கரன்சொல்வாரே.

## ஸ்தல விசேஷம்.

பதம்-இராகம்-யமுனைகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

நாரதமுனியேகேளே நாமுரைப்போமின்னாளே

அநுபல்லவி.

தாரணியிதி லிகபரபலமே ஜடுதியிற்றருவது சத்தியஸ்தலமே நாரத

சரணங்கள்.

அழகாமுயர்ஸத்ய ஸ்தலமிதுசுவேதநதிக்கரையோசனைதெற்கே-மறை
மொழிமுக்தகார்முக நதிக்கொருயோசனை முந்தும்வடதிக்கே-வெகு
செழிவாம்பூர்வஸ்தித புரிகீழ்பாலாம் செப்பும்யோசனையது முக்காலாம்
தொழும்பிரான்மலை யதுதிசைமேலாஞ் சொல்லும்யோசனையிரண்
டெல்லைகள்நாலாம் நாரத

தவமுயர்காவேரி நதிக்கித்தெற்காம்யோசனைமூன்றுந்தூரம்-தொடர்
பவமொழித்திடவரு சற்பநதிபுஷ்பபத் ராநதியின்தீரம்-சொல்லும்
இவையெல்லாம் சத்திய க்ஷேத்திரமிதில்சிகரி யேஸாளக்கிராமமலைக்
கிணைஸரி

நவிலுமஸ்தலம்தீர்த்தம்வனம்முனிகிரிநாதனுமேஸத்ய நாமந்தரிக்கும்புரி.
உகந்திடுந்தவஞ்செய்து சத்யம்நிலைத்த துரகேசமருமறையே-மிகத் [நாரத
திகழ்ந்தறிந்தான்சந்திரன் மாலையுற்றான்கருடன் தீர்த்தான்தாய்குறையே
மனம்

மகிழ்ந்தான்ஸத்யமுனி புரூருவச்சக்கரவர்த்தி மானஸாராதனஞ் செய்து
பெற்றான்-முக்தி
ஜகஞ்சொல்தட்சகன் துர்வாஸர்சாபமெற்றிச் சிறந்தானிந் திரத்விம்மன்
தேரடைந்தான் பக்தி நாரத

ஸ்தலமிதின்மலையரு கொருதருவுண்டதன் சரித்திரம் மாமகத்தே-இந்த
நிலமகிழ்கிர்தயுகந் தனில்பத்ரவடமாம் நிகழ்திரேதா யுகத்தே மும்
மலமகலரசாம்துவாபரம் ஸாம்பராணி மரமிக்கலியிற் பிலாவாய்தோணி
யுலவுதிர்காலமுங் காட்டுமேயாணி யுயரதிசயமின்ன முண்டதுகாணி நாரத
மரமிதன்சாகையொன்றித் தாலரசாள் மன்னர்க்கேகோது-மிக
உரமுறுசிறுகளை யொன்றித்தா லமைச் சுள்ளோர்க்கே தீது
தருவிதன்காய்ப்பொழிந் திடில்மழைகுன்றுந் தளிரிலையொழிந்தால்
புவியுயிர் பொன்றும்
ஸ்திரகிரியிதுதெரிந்திடுமௌவென்றுஞ் செகமிதில்யமபடர்வாராரென்றும்
நாரத

## தீர்த்தவிசேஷம்.

விருத்தம்.

ஸ்தலவிசேஷத்தைச் சாற்றிச்சிறந்தமா
நிலவணிந்திடு நிர்மலர்நாரதர்
மலர்முகந்தனைப் பார்த்துமாபாபங்கள்
விலகுதீர்த்தவி சேஷம்விளம்புவார்.

பதம்-இராகம்-செஞ்சுருட்டி தாளம்-சாப்பு.

பல்லவி.

தீர்த்தவிசேஷ மாமிதுவேயிந்த ஜகத்திரயங்களிலு மேயுயர்ந்ததுவே.

அநுபல்லவி.

சாற்றுமாதிசேஷன் தாங்குமித்தரணி
தழைக்கநிறைந்த இந்த சத்யபுஷ்கரணி — தீர்த்த

சரணங்கள்,

தாபத்ரயங்களைப் போக்கும்-இதில்
ஸ்நாநம்செய்திடில் பாதகங்களைநீக்கும்
பாபத்தொடர்ச்சியைத் தீர்க்கும்-இதைப்
பார்த்தவுடனே பரிசுத்தமாக்கும் — தீர்த்த
தீர்த்தமெதிலுமாடத் தீரும்-இதைச்
சிந்தித்தாலும்போரும் திரிவானேன்யாரும்
சாற்றும்ரவிவாரத்திற் சேரும்-அருணை
தபத்திலாடினால் கிர்தக்னதோஷமும்போம்பாரும் — தீர்த்த
இப்புனல்நடுவில் நிர்மலமாய்-சுபம்
இலங்குவெண் திருமண்ணுண் டெவர்களுந்நலமாய்
மெய்ப்படவணிந்திடில் சலமாய்-யமன்
விடும்படைக்கும் கவசம்வேறுண்டோ பெலமாய் — தீர்த்த
சுபபலந்தரு மிந்தநீரேயிதைச்
சூழ்ந்திடும்தீரத்தில் தெத்யான்னம்-ஒரே
கபளமாகிலும் மறையோரே உண்ணக்
கனிந்துகொடுப்போர்க்கிக பரபலன் கைவருமேசேரே. — தீர்த்த

விருத்தம்.

சொற்றதீர்த்தஸ் துதியிதுகேட்டருள்
பெற்றநாரதர் பேதமில்லாதுறை
மற்றதீர்த்தவற் கங்களுக்குள்ளுயர்
உற்றதீதென்ன வோதென்னக்கேள்ப்பரே.

பதம் இராகம் பிலகரி ஆதிதாளம்.

பல்லவி.

ஒதினீரிதே யுயர்ந்ததென்றதே

அநுபல்லவி.

எதினால் ஒன்றும் ஈடில்லையென்றும் ஓதினீர்

சரணங்கள்.

கங்காதிநதிக ளுங்காவேரியது
பொங்காழிகளினு மங்காமகிமையாய் ஓதினீர்

கூடியமரர்கள் தேடியனுதினம்
ஆடிநிறைபுனல் கோடிகளிலுமே ஓதினீர்

அந்தமருவும்வை குந்தமால்பதம்
முந்தவருமென எந்தவகையினால் ஓதினீர்

விருத்தம்.

நாரதமுனியிது நவிலப்பண்மேலன்
றாரகமுறநகைத் தோங்குபுங்கவன்
தாரதம்மியங்களைச் சாற்றிச்சத்திய
நீரதன்புகழின்னம் நிரைந்துகூறுவார்.

கண்ணிகள்.

இராகம்-கரகரப்பிரியா ஆதிதாளம்.

தவமுனநாரத முனியேகேளிந்த ஸத்யதீர்த்தசீலம்-அது
எவரறிவார்நம்மை அல்லால்ச்சேஷனு மியம்பானதின்மூலம் (க)

தரணியில்சுனைநதி தடங்கிணறுழியைந் தாமேதீர்த்தவிதம்-இதில்
நரர்முதலெவர்களு மாடிபாவமற்று நண்ணுவர் பரமபதம். (உ)

பாபங்கள்சுமந்திந்த தீர்த்ததேவதைகள் பரிகரித்திடமாட்டார்-மன
ஸ்தாபமுடனேபிர்ம்ம தேவரைஸ்துதித்திதைத் தணித்திடவகை
கேட்டார் (ங)

அப்போதயனிந்த ஸத்யபுஷ்கரணிநீ ராடப்பாபமொழியும்-மறை
செப்பும்ரிஷபமர ஸம்பவுர்ணமையிற் சென்றுடிக்கழியும் (ச)

சத்யதீர்த்தம்வட கரையில்வாள்பாசம் தரித்திருகிங்காரே-அதி
வெற்றிபெறுசுபத்திரன் பத்திரனென்பவர்தமை வேண்டவேணும்
பாரே (ரு)

அக்ஷதைதிலங்கொண்ட வாடியர்ச்சித்தனுக்ஞைபெற்றுடுவீரே-போம்
இக்ஷணமேயென்ன தீர்த்ததேவதைகள் யிதில்வர்தாடினாரே (சு)

எந்தெந்த ஆண்டும்வைகாசிப்பவுர்ணமையில்யிதில்வருந்தீர்த்தமெலாம்-
சொன்ன

இந்தமகிமையினால்சத்தியதீர்த்தத்தைவிட்டு எதைப்பெரிதென்று
சொல்லலாம் (எ)

நன்றுள்ளபுஷ்பத்திறைக் கிணையாம்புஷ்பபத்ரா நதியிதற் கருகோடும்-
யாரும்

சென்றிதிற்செய்யுந் தர்ப்பணாதிகள்கெயையினிற் செய்திடும்பலன்
கூடும் (அ)
கங்கையிலிறக்கவும்தனுஷ்கோடியிற்சென்று,காணவுமுக்த்தியுண்டே-
யார்க்கும்
அங்கம்நோகாமலிதை நினைத்தால்முத்தியென்றால் ஆர்விடுவார்
கண்டே (க)

## மூர்த்தி விசேஷம்.

விருத்தம்.

தேற்றியிந்தப்படிதீர்த்த விசேஷத்தையாவர்க்குந் தெரியவன்பாய்ப்
பார்த்தியம்பித்தன்னுகம் பைநாகமெய்நாகம் பரிக்கப்பூத்த
சேற்றிதட்டாமரைமலர்போற் பாதங்கைவாய்காட்டந் திகழும்ஸத்ய
மூர்த்திவிசேஷத்தைநாரதமுனிகேளென்றுபரன் மொழிந்திட்டாரே.

பதம் சகனாராகம் சாப்புதாளம்.

பல்லவி.

மொழிவோமுயர் மூர்த்திவிசேஷமிதே

அநுபல்லவி.

அழியாமறையின்னம் அறியாததைமுன்னம் மொழி

சரணங்கள்.

காணுமவர்க்கென்ன வேணும் இமன்பகை
நாணுமெவர்க்குமே தோணும்படியாக மொழி
ஸத்யபுரியிதில் வஸித்தவர் அயனுறை
ஸத்யலோகமதில் நித்யமுறைவர்முறை மொழி
கண்டேகிரிவலங் கொண்டேதையுமெண்ணித்
தொண்டேபுரிபவர்க் குண்டேயதுகைமேல் மொழி
பரிவாயுயர்ஸத்ய கிரிவாஸமதற்ற
அரிஸேவைகிடைப்ப தரிதாமேயெவர்க்கும் மொழி

உமாமகேசுவரநாரத ஸம்வாதம்.

முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கஎ-கீர்த்தனம்-கஉ

---

முதலாவது

## ஸத்ய தேவதை தவஞ்செய்த அத்தியாயம்.

விருத்தம்.

அரனிவைமூர்த்திவிசேஷங் கூறவுநாரதாதுகேட்ட ன்பாயின்பப்

பரமவின்னங்கேட்கக் கேட்கத்தெவிட்டா துயருமிந்தப் பதிமுன்னளில்
வரமுயருநாமமென்ன பூண்டதின்னுள் மெய்யமென வழுத்துமிவ்வி
பரமதென்னமொழிவீ ரென்றிட்டநாரதற்கானர் பகருவாரே.

பதம் இராகம் கல்யாணி சாப்புதாளம்.

பல்லவி.

ஸத்யக்ஷேத்திர மென்றவிதமே
சாற்றுவோமேயது தானேயற்புதமே

அநுபல்லவி.

மத்தியில்தீர்த்தமு மலையுங்கனமே
மருவுமாமலையைச் சூழ்ந்திடும் வேணுவனமே ஸத்ய

சரணங்கள்.

ஆதியிலசுரருமரக்கரும் நிறைந்தே
அவனியையழித்திட வதுகண்டுமறைந்தே
வேதமுனிவர்கள்செய் யாகங்கள்குறைந்தே
மேவினர்மலைகளி லேயொளித்துறைந்தே ஸத்ய

தேவர்களவிர்ப்பாக மற்றுடல்வாடித்
தியங்கினர்தர்ம தேவதைபயந்தோடி
மாவிர்ஷபமாய்ச் சோலைமலைதனைத்தேடி
வந்துதவஞ்செய்து தேமாயனைநாடி ஸத்ய

ஸத்யதேவதையொரு மான்போலே
தானவர்காணும விப்புவிமேலே
நத்தியிர்தவேணு வனத்தினில்மாலை
நாடிமாதவஞ்செய்தது அதனலே ஸத்ய

விருத்தம்.

தவமிதுசெய்துஸத்யத் தடத்தினிலாடியேமா
தவன்வடிவானஸத்ய சைலத்தைப்பூஜித்திந்தப்
புவனங்கள்தனைரெட்சிக்கும் புண்யமாமுதலேயெந்தன்
கவலையையொழிப்பீரென்று கதித்துதாம்ஸ்துதித்துதாமே.

பதம் இராகம் சுத்தசாவேரி ஆதிதாளம்.

பல்லவி.

ஹரியோ ஹரிதீனபந்தோ ஆகருணைஸிந்தோ

அநுபல்லவி.

பரிபாலகசேஷசயன பரமானந்தபங்கஜநயன ஹரியோ

சரணங்கள்.

ரெக்ஷஸத்யசைலஸ்வரூபா நிகிலஜகதீசப்ரதாபா
பக்ஷிகருடத்வஜபூபா பாபமோசனபத்மநாபா ஹரியோ

சதுராநனஸேவிதசரண சதகோடிதிவாகரகிரண
மதுகைடவப்ராணஹரண வரசோபிதகவுஸ்துவாபரண ஹரியோ

விருத்தம்.

ஸத்தியமிதுஸ்துதித்துத் தவஞ்செய்யநிசாசரர்க்கு
முத்தியபலமொழிந்து முனிவர்தேவர்கள் செழித்தார்
நித்யமாலருளாலிந்த நெடுவனந்தீர்த்தமிவ்வூர்
நத்தியமுனிமாமூர்த்தி நாகமுமெய்யாச்சன்றே.

முதலாவது

ஸத்தியதேவதை தவஞ்செய்த அத்தியாயம்.

முற்றிற்று.

ஆகதிரு விருத்தம் ௩ கீர்த்தனம் ௨

---

இரண்டாவது

## ஆதிசேஷன் வரம்பெற்ற அத்தியாயம்.

---

விருத்தம்.

சரணமாதேவசம்போ ஸத்தியசரித்திரஞ்சொன்னீர்
உரகேசனுதியாக வுற்றமற்றவர்கள்காதை
வரன்முறையுரைப்பீரென்ன மகிழ்ந்துநாரதருக்கீசன்
றாமுயராதிசேஷன் சரித்திரஞ்சொல்கின்றாரே.

கண்ணிகள்.

இராகம் நாதநாமக்கிரியை ஆதிதாளம்.

ஆதிசேஷன்பணமுடியாயிரம் அதுவெகுவிஸ்தாரம்-அது
நீதியாய்மூன்றுலட்சம்யோசனை நீளமாஞ்சரீரம் (க)

பெருமன்நாற்பதி னாயிரம்யோசனை பிலத்தவெள்ளிமலையே-நிகர்
ஸரியாம்மவுலிமாலையின்பிரபையால் தங்காதிருள்நிலையே (௨)

விளங்கும்மகாகூர்மாசனத்தின்மேல் விண்ணிறைபடம்விரித்தே-அங்கு
கிளம்பிநாகலோகாதிபத்யனைக் கேசவனடிஸ்மரித்தே (௩)

எறிட்டுப்பார்க்குந்திசையெலாங் கண்ணுக்கெட்டாதநெடுந்தூரம்-அங்கே
நீறிட்டுக்கடலையும்மலையையுந்தீய்க்குமே நெடும்பார்வையின்குரூரம் (௪)

மூச்சிற்பிரசண்ட மாருதமும்வடவா முகமும் யெதிர்நில்லாதே-அதின்
ஓச்சலான இடங்களிலும் ஸஞ்சரிப்போருண்டோ அதுபொல்லாதே (௫)

இந்தத்தமோகுண மெல்லாம்மாயனை யென்செயும் யிளவெயிலே-திருமால்
அந்தச்சேஷன்மே லானந்தமயமா யமர்ந்தா ரறிதுயிலே (௬)

பூமிதேவிதிரு வடியிணைவருடப் பூமகள் தொடைகுத்தக்-கண்டு
காமியாகியிரண்டசுரன்வந்தானிந்தக் காரிகைய ரைப்பற்றக் (எ)
கண்டேசேஷன்விழித் தழலாலந்தக் கள்வர்களை மாய்த்தான்-பயம்
கொண்டேமாலருள் யேதோவெனவுடல் குறிகியேகலை சாய்த்தான் (அ)
அதுகண்டுமாயன் அஞ்சாயென்றுகை யமத்தவும்மனந் துணிந்தான்
ஸ்வாமி
இதுவென்தமோகுண மெப்போதொழியு மின்றிரங்குவீரெனப்பணிந்தான்

விருத்தம்.

ஆதிசேஷன் அரிதனைப் போற்றியே
நீதியேயெனை நேர்ந்த தமோகுணம்
வாதியாதொழிப் பீர்நெடு மாயனே
ஜோதியேயெனஸ் தோத்திரஞ் செய்வனே.

பதம் இராகம் தேவகாந்தாரி-திரிபுடை தாளம்.

பல்லவி.

ரக்ஷ ரக்ஷ ஸ்ரீநிகில ஜகத்பதே ரக்ஷமாதவ நிஜதயாநிதே

அநுபல்லவி.

அக்ஷிரஜா- அகிலகாரண லக்ஷ்மிநாயகா லயநிவாரண ரக்ஷ

சரணங்கள்.

அச்சுதானந்தா ஹரிஸ்ரீகோவிந்தா
ஸச்சிதானந்தா சரணரவிந்தா
மத்ஸ்யாவதாரா வரவேதஸாரா
நிச்சயாகாரா நிமலநிரர்தாரா ரக்ஷ

தேவரீர்பத ஸேவையேநிதம்
ஆவலாமெனை அக்ஞானதீவினை
மேவுந்தவஞ்செய்யும் விதியிணல்லையும்
தாழ்வுதீர்வனே ஸத்வஞ்சேர்வனே ரக்ஷ

நடக்கும்பதமற்றேன் நகருந்துயருற்றேன்
அடுக்கும்நித்திரை யகலாவெனக்கினை
மடுக்கும்லக்ஷணம் வாயுபக்ஷணம்
கிடைத்ததென் சொல்வேன் கேட்கக்காதிலே. ரக்ஷ

விருத்தம்.

அனந்தனிவ்வாறுவேண்ட அவனியிலுரகமான
இனந்தகுமுங்கட்கெல்லா மியற்கையேதமகுணந்தான்
சினந்தவிர்நமதன்பாலே சேருவாய்ஸத்வக்ஞானங்
கனந்தகுந்தவஞ்செய்யென்னக் கருணைமாலருள்செய்வாரே.

பல்லவி.

தவஞ்செய்வாயிப்போது நீயே சஞ்சலப்படாமலேயே.

அநுபல்லவி:

பவமகோததிதொலைக்கும் பரப்பிர்ம்மபதம் நிலைக்கும் தவம்

சரணங்கள்.

தபவின்பரிபாகத்தாலே-தாமஸமொழிந்துமேலே
சுபமதாம்சப்தபிர்மக் ஞத்வம்வரும்ஸத்வத்தின்பிரக்ஞா தவம்
பெற்றசப்தபிரம்மம்பின்னே சுத்தபரப்பிர்மஞ்சொன்னேன்
சித்தநிர்மலமேயாவாய்-மற்றவிசாரங்கள்மேவாய் தவம்
அரிதுசப்தபிர்ம்மக்ஞானம் அருந்தவத்தால்தானும்-ஆன
பரதகண்டம்தன்னில்சென்றே பரிசுத்தஸ்தலத்தில்-இன்றே தவம்

விருத்தம்.

அரியருளறிந்தனந்த னையனேயருந்தவஞ்செய்
புரியெதுமந்த்ரமென்ன புரியுநாளிவளவென்று
தெரியிலேன்விரித்துக்கூறுந் திருவுள்ளமறியேனென்னக்
கரியெதிர்வந்துகாத்த கடவுளீதருள்செய்தாரே.

பதம் இராகம்-ஆரபி சாப்புதாளம்.

பல்லவி.

மாதவஞ்செய்விதமே-வகுத்துரைப்போம் இதமே

அநுபல்லவி.

ஆதரமாமுன்னைநாமே-அரைக்ஷணம்பிரிந்திரோமே மாதவம்

சரணங்கள்.

நித்யம்சமதுதெர்சனம்நீங்க நினையாதுன்மனம்
உற்றதாலேசீக்ரகாலம் உயர்தவத்தாலனுகூலம்
வித்தியாகும்ஸத்யஸ்தலம் திவ்யதேசமானசைலம்
பெற்றயேகாந்தக்ஷேத்ரம் பெறுவாயின்றைக்கேநல்வரம் மாதவம்
சித்தமேகாக்ரமாய்கதை ஜெயசங்கசக்ரமதை
வைத்தஹஸ்தாரகாம்மை மதித்துமந்த்ரங்களிற்செம்மை
யுற்றஅஷ்டாக்ஷரமது உத்தமோத்தமமானது
பக்தியாய் ஜெபித்தபேர்க்கு பந்தமொழிக்குமேயார்க்கும் மாதவம்
எட்டெழுத்துக்கேரிஷிநாமே சந்தஸுகாயத்ரியாம்
இஷ்டதெய்வம்பராத்பரம் யென்றுநாமேயாம்விபரம்
தொட்டஓங்காரம்கருமை சொல்லும்நகாரமேசெம்மை
[illegible]மோகாரங்கறுப்பு இணைந்தநகாரம்சிவப்பு மாதவம்

கிட்டும்ராகாரங்குங்குமங் கேளும்யகாரமேசொர்னம்
திட்டணகாரமஞ்சனம் சிறந்தயகாரம்செங்நிறம்
அஷ்டாக்ஷரவர்ணநிக மாமேஸர்வார்த்தஸாதகம்
சிஷ்டர்யாவரும்மதித்து ஜபித்துமகிழ்வார்ஸ்துதித்து மாதவம்

ஓதியபக்தர்க்குஸ்வர்க்கம் உயர்ந்திடுமேஅபவர்க்கம்
வேதபாராயணஸித்தி விளங்கும்ஸநாதனம்ஹத்தி
பாதகமெதுவும்நாசம் பண்ணுமந்த்ரங்கட்குராஜன்
நீதமாய்நமையேயெண்ணி நித்யமிதைஜபம்பண்ணி மாதவம்

ஸாதகமாம்ஸந்தியாகாலம் தான்ஜபிப்போர்க்குயர்சீலம்
யேதுவேணும்பாபங்கள்பேரம் யெரியினிற்றரும்புபோலாம்
ஆதரமாமுயர்மந்த்ரம் அருந்தவமற்றுள்ளயெந்த்ரம்
யேதமறுஸ்வர்க்கம்முக்தி யெல்லாமிதுவாமேபக்தி மாதவம்

ஆரணத்துக்கிதாதாரம் அதிரகஸ்யமானஸாரம்
சேருமிவ்வஷ்டாக்ஷரத்தின் ஜபமதுலக்ஷமாவர்த்திக்
கேருமந்த்ரஸித்திரெண்டுக் கேஸ்வர்க்கபதவியுண்டு
பாருமூன்றுக்கேஸாலோகம் பகரும்நாலுக்கேஸாமீபம் மாதவம்

சாருமைந்துக்கேஸாயுச்சியம் தந்திடுமேஆறுலக்ஷம்
சீரில்நம்மிடத்திற்புத்தி தீர்க்கமாமேழுலக்ஷத்தில்
ஆரும்பெறுவார்ஸாரூபம் அன்பிலெட்டுலக்ஷம்லாபம்
நேருமேநிர்வாணமுக்தி நினைத்ததெல்லாமாமேஸித்தி மாதவம்

விருத்தம்.

இந்தவாறருளவுலகஞ்சுமென்று
யிரந்தலேசித்தைந்தலேயுற்றெழுந்திப்பாரில்
அந்தமுயர்பெருந்துறையாமூரில்மேவும்
அரியின்ஸந்நிதியிலடையாளங்காட்டி
வந்ததற்குக்கீழ்த்திசையில் விளங்கும்ஸத்ய
மகாஸ்தலத்தில்மாலருள்போற் றவஞ்செய்போது
சொர்தமால்ஹயக்ரீவவடிவாய்வந்து
தோன்றநமஸ்கரித்தனந்தன் றுதிசெய்தானே.

பதம் இராகம் அடாணா ஆதிதாளம்

பல்லவி.

ஜெயஜெயதேவ த்ரிலோகேசா

அநுபல்லவி.

ஜெயலட்சுமிபதே ஜெயகருணாநிதே ஜெய

சரணங்கள்.

ஜெயஅச்சுத ஜெயவாமன ஜிஷ்ணோ
ஜெயபக்தேஷ்டதாயக விஷ்ணோ ஜெய

ஜெயக்ஞானமிர்த ரூபஉல்லாஸா
ஜெயாந்தர்யாமின் ஜீவஹிர்தவாஸா      ஜெய
ஜெயஜெயஜெய அக்ஞானவிநாசா
ஜெயஜெயஜெயஜெயபக்தேசா      ஜெய

விருத்தம்.

உரகேசன்றதிந்திச்சை யெல்லாமின்றே
யுற்றேனின்றரிசனத்தா லுயர்ந்தேனென்ன
ஸ்திரமாழிசேஷபல ஜெகதாதார
சேஷபஞ்சபஞ்ஜ்வலநீ சிந்தித்தோர்க்கும்
வாமுன்னும்க்ஷீராப்தி தன்னிற்சொன்ன
வாறுதவக்ஞானபல ப்ராப்தியாக
விரவுசப்தக்ஞானமது தந்தோமென்ன
வேண்டிமற்றும்சேஷனிது விளம்புவானே.

கண்ணிகள்.

இராகம் தனுசரி ஆதிதாளம்.

அனுக்கிரகம்செய்வீர் கிர்பாஸாகரா ஹயக்ரீவாவதாரா
ஜெனிப்பதுநீங்கி க்ரதார்த்தனேன் ஜலஜாயனவீரா (க)
ஸத்யபுரியிதில்தானேதினமும் தபஸுசெய்துநானே
வித்திபெற்றதுஜகங்களறியவே செய்வீர்பெருமானே (உ)
பாலாழிதனிலே துயின்றததுபோல் பதியிதிலேதங்கும்
மாலேயென்மேற்றுனேநீர்கண் வளரவேணுமிரங்கும் (ங)
பாரிதுதனிலேமகிழ்வா யென்மேல்ப் பள்ளிகொண்டருளய்ய
ஆரும்பணியவே தேவரீரையென்றும் அடியேன்பூஜைசெய்ய (ச)

விருத்தம்.

ஸ்தோத்திரமிதுசெய்போது துயில்வோமுன் மெய்யிலின்றே
யேற்றுமிப்பதியில்பக்த்தர்க் கிதமுறப்பிரவித்தமாகத்
தோற்றுவோமென்றுமென்றே சொல்லியன்பாகச்சேஷன்
மேற்றுயில்திருமாலத்தன் மெய்யினிலப்பூஜித்தானே.

பதம் இராகம்—தர்ப்பார்—ரூபகதாளம்.

பல்லவி.

பூஜித்தானே— புகழ்ந்துதானே

அநுபல்லவி.

தேசுக்ருதி— சேஷன்றுதி

சரணங்கள்.

பத்தித்தனதுபெரியதேகப் பாயல்மீதிலுவந்துயோக
நித்திரையதுசெய்தருளும் நெடியோன்றனையே அன்பாக      பூஜித்தானே

நற்புகழ்ராமசாமி நயர்தசேய் கருப்பனுலும்
பொற்பபழகப்பனென் போன்புத்திரன்பெருமாளென்னுஞ்
சொற்புகழழகப்பன் பேர்த்தாயவனுலும்பூவில்
விற்பனர்தேறவச்சில் வெளிபுறவாழ்கமாதோ. (௫)

பட்டுக்கோட்டை தாலூகா பின்னவாசலிலிருக்கும் அருள்கவி
கா. மு. கண்ணுசாமிக்கவிராயர் இயற்றிய
ஆசிரிய விருத்தம்

குறையாத திருமெய்யப் பெருமாள் புராணமவை
குற்றமில் கீர்த்தனமதாய்
குருமுனியெனச் சொலமறையவன் பாரதி
கோதிலாச்சுப்பிரமண்யன்
வரமுறைகள் தவராத ராயவரமாநகர்
வளமுள்ளபுள காங்கிதன்
மைந்தநல்லுத்தமன் புத்திரன் சித்தமகிழ்
வழகுள்ளகிருஷ்ணையரும்
விரைவினிலச்சிட முயர்ச்சியாய் வே
ண்டிடவிளங்கு நற்காரை நகர்வாழ்
வித்தகனுத்தமனிராமசாமிசுதன்
விளங்கிய கருப்பண்ணனும்
பொருள்வளர் மாசிலானளகப்ப வைசியன்
புண்ணியப் பெருமாள்திகழ்
பொருளுதவி செய்தனர் கலைமகள் விளங்கிட
பூதலம்புகழ்வாமரோ.

உ

ஸ்ரீராமஜெயம்.

# சிறப்புப் பாயிரம்.

இஃது

இந்நூலாசிரியரின் பூர்வீகஸ்தலமாயும், புவனேக வீரபாண்டியபுரமென்ற பிரதிநாமமுடையதுமான பழவாபுரி மகா-ள-ள-ஸ்ரீசிதம்பரபாரதிகளென்ற சின்னஸாமிபாரதிகளின் கனிஷ்டகுமாரன் சுப்பராமய்யரென்ற இராமஸாமி அய்யரால் இயற்றப்பெற்றது.

## நிலமண்டல ஆசிரியப்பா.

சீருயர்பாண்டிய தேசத்திலங்கும்
வீரர்கள்மருவும் மிளிர்புதுக்கோட்டை
ஸமஸ்தானத்தில் தாய்(பி)ரகன்னாயகி
யமைக்குயர்தாஸ ராஜசராம்தொண்டமான்
வங்கிஷந் தாங்கும் வளமிகப்பெற்றுயர்
பங்கமில்ஸத்தியப் பதியுள ததிலுறும்
பூவுயர்ஸர்ப்ப புஷ்பபத்ராநதி
மேவுமிஸ்தலத்தினில் மேலுயர்சிகிரியே
ஸாளக் ராமமாம் ஸத்தியப்பெயரையெந்
நாளும்பொருந்தவே நவின்றிடும் தீர்த்தமும்
வனமும் மு கிரிமற்றும்நாதனும்
தினமும்விளங்கிடும் சேசுறும்ஸத்திய
தேவனர சேடனும் திங்கள் கருடனும்
பூவுயர் மெய்ம்முனி புரூருவவரசனும்
இசைபெறும் தட்சகனிந்த்ரத்யும்னனும்
திசைபுகழ்தவமதை செய்துவந்தஸ்தல
மகிமையார்புராணம் வடமொழிதனிலிருந்
தகமகிழ்தமிழி னதிசயக்கீர்த்தன
ரூபமாச்செய்யென நட்பொருள் விளக்கிடும்
தீபமாவிளங்கிடும் திருவிளையாடலின்
கீர்த்தனந்தனைச்செயுங் கெண்ணியன்மையைவயிற்
கீர்த்தியார்கவிகளிற் சேஸரிஸுந்தரன்
மகிழ்ஸுதன்சுப்பிரமணிய னைத்திருமெய்ச்
சுகிர்தராம் பெரியவர்துறையுடன் கேட்டிட
வெண்பா கவித்துறை விருத்தமும் கீர்த்தனம்

பண்பார்கணிசனும் பல்லவைகள் பொருந்தும்
படிநாடகத்தமிழ்ப் பாக்களிற் செய்துமிப்
படிதனில் விளங்கிடும்படி யமைத்து வந்தனன்
பூவுயர் காரையம் பொன்னகரந்தனில்
மேவும் வயிரவன் மிளிர் கோயிலிற் குளான்
கேரள சிங்கங் கிளர்வளநாடான்
பேருயரோழகைப் பெருந்திருவான
வீரபாண்டியபுரமின் சிறு குளத்தூ
ருடையான் தெயினுனுவந்திடும் புதல்வனாற்
கொடையானிலக்குமி குலவுநன்னடையான்
விருப்பொடு தர்மமே மேவிடு மகத்தினன்
சருப்பன் செட்டியக் கண்ணியன்சோதரன்
புதல்வனி ராமனும் புராணமதனையற்
புதமொடுமச்சிடப் புவிதனில்விளக்கினர்
வணிகனக்சருப்பன் மகனளகப்பனுக்
கணிஸூத னிராமலவ்வாலபச்சத்திப
மூர்த்தி கோயிலூர்குளே முன்னுமிராமனுக்
கேர்த்திடுங் கோயிலைப்பிசைவொடு மமைத்துக்
கும்பாபிஷேகக் குதுகலித்திடநடந்
தின்பம்பெற வெகு விசைவுடன் நடாத்திக்
கருப்பவணிகனக் சணம்ப்ரஸாதங்களை
விருப்பொடுமிருந்தவன் விநியோகித்திடும்
தருணமோர் மனிதனும் தாங்கு பத்ரிகையுடன்
வருவதைக் கண்டிட மனமகிழ்ந்தவனையி
ராமன் ஜனித்தனனேயென நவின்றிட
வே மகிழ்ந்திட நிஜமென்றவன் சொற்றிடும்
வார்த்தையை இரு செவி மன்னிடக் கேழ்க்கவும்
சீர்த்தியா யெவர்க்குமே திரவியமளித்தனன்
அது முதற் கோயிலினச்சுதற்கணிபணி
நிதமு மேலாயுற நேர்ந்திடச் செய்தனன்
அம்ப்ரமோ தூதகல் வாண்டினிலானியில்
இன்பமார்தெய்தியா றினிற்சனிக்கிழமையில்
இருபதாம் நாழிகை யினில் விநாடிகைபினும்
இருபதோ டெட்டெனுமியைந் தநற்றினமதில்
அவ்விராமன் ஜனித்தது முதலவர்குலம்
செவ்வனே விளங்க நற்றிரவிய மிகுந்திடும்
ராமசாமி யெனும் நற்பெயருற்றவி
ராமனுக்குயர்ஸூதன் நலமிகு கருப்பனும்
அவ்வளகப்பனுக் கன்பனுமுதற்சுதன்

ஒவ்வுமி ராமனோடுடன் பின் மகனெனப்
பெருமாளெனும் பெயர் பெறுமளகப்பனும்
அருமையாஜ் ஜனித்தவரணிகுலம் விளங்கிடும்
இந்தமாதிரியிவரெழிற்குலம் விளங்கவே
அந்தரங்கத்தொடுமவர் மிகும் பக்தியால்
ஸத்தியமூர்த்தியின் ஸந்நிதியிற்றினம்
ஒத்ததத்யோதன முச்சிக்காலத்திலும்
சுண்டலும் தோசையும் சுத்தமாவமைத்துநற்
றண்டுளபனுக்குமெச் சாயரட்சையினிலும்
புளியோதரையுடன் புட்டுமே சமைத்தவை
யளிபரிக்கமைந்தநல் லர்த்தஜாமத்திலும்
நைவேத்திட நியதமாயெவர்க்கும்
மெய்ம்மறையவர்க்கும் விநியோகித்துமி
ராமன் கோவிலினற்றிருப்பணியதை
யேமன மகிழ்ந்திட யிசைவுறச் செய்துபின்
நித்தியப்பூஜையும நைவேத்யமுமுற
யெத்தினங்களினு மினிதொடு நடாத்தியும்
தந்தை ஸ்ரீ ராமன் ஜனித்திடும் நவமியி
ருந்து பத்துத் தினம் நுவன்றிடுமெணிதிகழ்
உத்ஸவஞ்செய்து மெவ் வுத்ஸவங்களினிலும்
மெச்சுமொன்றிரண்டென விளங்கு மண்டகப்படி
வரையிலும் நடத்திட மற்று முத்ஸவங்களிற்
குரிய சிற்சில விழா வோங்கு மண்டகப்படி
களிற் பரிவட்டமும் கட்டிடப்பெற்றவர்
களை மரியாதையுங்கலந்தவர் ஜாகையில்
கொண்டுவந்துரிமையாக் கோவிலார் சேர்த்திடத்
தண்டுளவத்தனின் றண்ணளியேற்றிடும்
வணிகனும் கருப்பனும் மகிழ்பெருமாளெனு
மணிபெறும் வணிகனுமளகப்பனுமவர்
முன்னவர்ச்ரத்தையாய் முதற் பதிப்பினில் மெய
நன்னகர்ஸ்தல முயர் நற்புராணந்தனை
அச்சிட்டிடுமது அனவரதமு மிக
எச்செகந்தன்னிலு மினிதொடு விளங்கவே
இரண்டாம் பதிப்பென வெழுதாவெழுத்தினில்
தரம் பெறப்பதித்தனர் தரணியில் வாழ்கவே

சுபம்

உ

சிவமயம்.

இஃது

புதுக்கோட்டை ஸமஸ்தானம் திருமெய்யந் தாலூகா
இராயவரத்திலிருக்குந் திருவிளையாடல்
சுப்பிரமண்ய பாரதியவர்களுடைய பௌத்திரனும்
சுப்பராமய்யருடைய புத்திரனுமான
திரு. சு. சு. கிருஷ்ணய்யரால் இயற்றியது.

## சிறப்புப்பாயிரம்.

திருமாதுலவுந் திருமெய்யந்தனில்
வருஸத்யமூர்த்தி வருகுற்றமைந்த
உய்யவந்தாளொடு முலகம்புரப்பச்
செய்யதாள்பற்றியே சேடன்முதலோர்
அய்யகாப்பாற்றென வனவரதம்பணிந்
தய்யனைவேண்டவ வனருள்பெற்றிடப்
பூமிதனிலுயர்புண்ணிய க்ஷேத்திரம்
நேமியான்றனக்குநித்த மூம்வாஸ
மென்றறிந்திட்ட விலக்குமிகடாக்ஷம்
துன்றியகாரை துலங்கியவைசியர்
கருப்பேந்திரனுங் கனராமசாமியும்
விருப்பமுடனே விஷ்ணுபுராணம்
முதலாய்ப்பதித்து முற்றுணோர்க்கீய்ந்த
விருத்தாலெவர்களும் மேன்மையாய்ப்படிக்கப்
பூதலமதனிற் புத்தகம்விளங்க
மாதலமெங்கும் மகத்துவந்தெரிய
மனமகிழ்கருப்பணன் மகன்றருமகனும்
கனராமசுதன் கருப்பணவணிகனும்
இனமாரளகப் பேந்திரசுதனும்
இனிதமர்பெருமாளெனு மளசப்பனும்
எருயர்புராதனமிலங்கு புராணம்
பார்தனிலிரண்டாம் பதிப்பினில்விளங்க
அச்சிற்பதித்தான வனியோர்மகிழ
அச்சுதன்க்ருபையாலக் குலம்வாழ்கவே.

# பிழைத் திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 20 | 9 | ,, | வ |
| 24 | 2 | ,, | ச, ரு |
| 26 | 33 | ா | ,, |
| 30 | 25 | த் | ங் |
| 33 | 22 | ம் | ங் |
| ,, | 23 | ா | ,, |
| ,, | 25 | ம | ம் |
| ,, | 30 | ஞ் | ம் |
| 34 | 21 | ழி | யி |
| ,, | 27 | ,, | வ |
| 40 | 4 | கொ | கொ |
| 44 | 30 | யெவா | யெவர் |
| ,, | 34 | புத | பத |
| 14 | | | பதம்-இராகம்-<br>பூறிகல்யாணி-ரூபகதாளம் |

மஞ்ஸமானமெய்யையாய்ந்து மகிழ்ந்தாஸாமாகசேர்ந்து
பஞ்சமுகத்தாலுமர்க்ய பாத்யாசமனமீந்து பூஜித்தானே
சித்தமேகந்தமாகச்சாத்திச் சிரசைபுஷ்பமாய்த்தூக்தி
நித்யமும்தூபம்மூச்சாக ரத்நதீபங்களையேத்தி பூஜித்தானே
நாக்கினைவிசரியாக்கி நர்ப்படம்குடையாய்த்தூக்கி
நீக்கிடாமலேபிராணனை நைவேத்யம்செய்துநோக்கி பூஜித்தானே

விருத்தம்.

பூஜித்தசேஷன்மே லன்பாய்மாயன் புகழ்அயக்ரீவ ரூபம்மறைத்து
நேசித்தவவன்பணு முடிநிழற்குள் நெடுமால்க்ஷீ ராப்தியுற்றார் சென்ற மாற்கம்
தேசுற்றநதியாச்செட் டெழுத்திலன்பாய் ஸ்ரீதரன்பதாகதனுய் அக்ஞானத்தின்
மாசற்றுபவரகித னுகிச்சேஷன் மகிழ்ந்தானென்றார் முனிக்குமகேசர் தாமே.

விருத்தம்.

ஆதிசேஷன்றன்
காதையாமிது
ஓதுசந்த்ரன்மா
நீதிகூறுவாம்.

இரண்டாவது
ஆதிசேஷன் வரம்பெற்ற அத்தியாயம்.
முற்றிற்று.
ஆக திருவிருத்தம்-கூ-கீர்த்தனம்-எ.

---

மூன்றுவது

## சந்திரன் வரம்பெற்ற அத்தியாயம்.

விருத்தம்.

மோகாந்தகாரமற மோக்ஷமார்க்கம்
முன்காட்டியெவர்க்குமருள் ஸத்யக்ஷேத்ர
மகாத்மயஸ்மரணமிதில் முன்புசந்திரன்
வந்துயெந்தஸாதனத்தா லெந்தவண்ணம்
யேகாந்ததபம்செய்த தெங்குபெற்ற
தென்ன அத்ரிகண்ணிலே னுதித்தானென்று

பாகார்ந்தமொழிபாகர் தன்னைக்கேட்டுப்
பணிந்தநாரதர்க்கரனார் பகருவாரே

**கண்ணிகள்.**

இராகம்-லாவணிகாபி திர்புடை தாளம்.

அத்ரிமகரிஷி யனுதினந்தபஸுசெய்
தகமதில்நேசித்தார்-ஸ்ரீ அரியைப்பூஜித்தார்
சித்தமிரங்கியே மும்மூர்த்திகளுஞ்
சேகரமாய்வந்தார்-திவ்ய ஸேவைதந்தார் (க)
ஒருவரைவேண்ட மூவருங்கிர்பைசெய்
துற்றதுயேதன்றார்-ஓதிப்பணிந்துநின்றார்
வருமூவருமே நாங்களொருவர்தான் நீ
வரங்கேளெனக்கூற-மாமுனிமனந்தேற (உ)
புத்திரராகவருவீரெனக்கென்றே
புண்யமுனிவரித்தார்-புகழ்ந்துநமஸ்கரித்தார்
அத்தினமேஅரி தெத்தாத்தெரேயராய்
அவரிடமவதரித்தார்-அங்கேசஞ்சரித்தார் (ங)
அரனேமுனி துர்வாஸராகவே
அப்போதேகுதித்தார்-ஆருங்காணஉதித்தார்
வரமுயர்பிர்ம்மாசந்திரனாகவே
வந்தங்கேபிறந்தார்.மகிழ்ச்சியாகச்சிறந்தார் (ச)
இந்தமூவருந் தந்தையைநமஸ்கரித்
தென்செய்வமெனக்கேட்டார்-இதம்உரைஎன வேட்டார்
மந்திரமும் யிடமும் உபதேசித்து
மாதவஞ்செய்யவிடுத்தார்-மாமுனிதவந்தொடுத்தார் (ரு)
இமயகிரியிற்போய்த் தெத்தாத்தெரேயர்
இருந்தார்தபநிலையில்-யென்றுமந்தமலையில்
தமையுணருந் துர்வாஸமகரிஷி
தான்சென்றார்கைலாசம்-தாங்கினார்தபவாஸம் (சா)
ஸத்யகிரியிதிற் சந்திரன்வந்து
ஸத்யபுஷ்கரணியிலே-ஸ்நாநம் செய்ததிலே
மத்தியில்நின்றேகாக்ர சித்தமாய்த்திருமாலை
மனவில்வைத்தே-மாறாமல்ஸ்துதித்தே (எ)
அஷ்டாக்ஷரத்தை ஜெபித்துக்கொண்டேநித்யம்
ஆதித்யனைப்பார்த்தே-ஆராதித்துவிழிபூத்தே
கஷ்டமான தபஞ்செய்தான்சந்திரன் ஆ
காரம்நித்திரைநீக்கி-கருணைமாலைநோக்கி (அ)

விருத்தம்.

மாதவனைக்கனகமணிமயகேயூர மகுடகுண்டலகவுஸ்துவரெத்நஆர
பீதகனசேயவாஸாலங்கார ப்ரபாசங்க சக்ரதரபீடநீர
ஜாதருணவநஜாக்ஷ யேமவர்ன சரீரராய்த்யானித்துத் தபஞ்செய்சந்திரன்
ஆதரம்பார்த்தெழுந் தருளிமகிழ்ந்திரங்கி அரிதெதிவாமனரூபராய்வந்தாரே

பதம் இந்துஸ்தானி-சகனாராகம் ஆதிதாளம்.

பல்லவி.

அவதரித்தார் தெதிவாமனராக

அநுபல்லவி.

தவமுற்றசந்திரன் தன்குறைபோக-தாகமாகவே அவத

சரணங்கள்.

பெற்றவெண்ணவநீத ப்ரிதிமைமைப்போலே
யுற்றதேகவர்ன மோங்கமேன்மேலே-ஒதுவேதமால் அவத
விரிந்ததுயிலொளி நிலாவென்னவே சுவேத
அரவிந்தமலராஸனத்தினிலோத ஆதிமாயனே அவத
அளிகள்சூழமலர் அரவிந்தமென்ன
அளகஞ்சூழமல ரானனமின்ன-ஆவலாகவே அவத
தெக்ஷிண ஹஸ்தந் தெத்யான்னத்துடன் நீட்டி
ரக்ஷகர்த்தனென்பது நிலக்கவேகாட்டி-நேராக அவத
அமிர்தகலசம்வாம ஹஸ்தத்தெடுத்து
சமபமிதாட்கொள்ளத் தகுமெனஅடுத்துத்-தாமேயே அவத

விருத்தம்.

மன்னுமாதெதி வாமனமாதவன்
பன்னுபாரின் பயிர்கள்தழைக்கவே
மின்னுமேக மிரையும்விதமென
உன்னுசந்த்ரன்முன் னுற்றுவந்தோதினர்

பதம் ஸ்ரீராகம்-சாப்புதாளம்.

பல்லவி.

சந்த்ரா-யிந்தா தத்யானந்தான்

அநுபல்லவி.

உந்தன்பசியே-யொழிந்திடுமொழியே சந்த்ரா

சரணங்கள்.

மாயனேகரமே - மாதவஸ்திரமே
யாமதால்வெகு மகிழ்வானேம் கேள்வரமே சந்த்ரா

ஓ சுகுமாரா-உன்னிராஹாரா
வாஸம்நன்றன்ன பானமதியாத்திரா சந்த்ரா
கோமளதேகம் - குழைந்ததேசோகம்
மேமிகும்மமிர்தமுண் டேதீருதாகம் சந்த்ரா
ஆயிராாம- மதிலுயர்ராம
னேயெனும் பேர்கொள்வாய் நீயபிராம சந்த்ரா

விருத்தம்.

ததிவாமனப்பகவா னருளவேநின் றரிசனத்தால் திர்ப்தியாய் தன்யனு னேன்
யெதுவரிதாம் தயாநிதிநின்பக்தர்க்கிந்திரையீசரவிமண்டலத்துமிந்த மெய்யப்
பதியினுமுற்றதுபோலென் மண்டலத்தும் பரிந்திந்தவடிவாக விருந்தா னென்ன
மதிமண்டலத்துளிருந்தருளினர்விண் மாதவர்ஸேவிக்கநெடுமாயன்றனே.

பதம் இராகம்-ஆரபி ஆதிதாளம்.

பல்லவி.

சந்த்ரமண்டலத்தென்றும் வஸித்தார்-தேவர்
தாபதரெவருந்தெர்சித்தார்

அநுபல்லவி:

வந்தவாமனவடி வாகவேயுள்ளபடி சந்தா

சரணங்கள்.

ராஜீவசுவேத விராஜிதமலர்மேலே
தேஜோமயமாக ராஜஹம்ஸம்போலே சந்தா
கண்டவர்கண்குளிர்ந்து தெண்டனிடவேசேர்ந்து
விண்டலம்விளங்கவே அண்டர்க்கமிர்தமீந்து சந்தா
பாரோர்பணியும் ஸூரியநாராயணராய்முன்னம்
பேரானதுபோலேயே ஸ்ரீராமச்சந்திரனென்ன சந்தா

விருத்தம்.

வாழ்ந்ததிவாமனனே முக்த்தாஆர மணிநவபூஷணப்ரங்கா காரகேசஞ்
சூழ்ந்தபங்கஜானனப்ர காசபூர்ண ஸொர்ணகடசுத்தஜல வாமஹஸ்த
சாந்ததக்ஷணஹஸ்த ஹேமகும்பதத்யான்ன தாரணராய்த் தரித்ததேக
ஞ்ந்தபோமாகாத்ம்ய னத்ரிநேத்ரோத் பவஸு தாகரன் ஸ்தோத்ரமது செய்தானே

பதம் இராகம்-நோட்டு ஆதிதாளம்.

பல்லவி.

நமோநமோ கோவிந்தா ஹரிநாராயணா னந்தா

அநுபல்லவி.

நமோஜனன விமோசன ஸ்ரீ நமோ

சரணங்கள்.

பராத்பரசுந்தரா சக்ரதராசத்ய சிகராஹரி நமோ
நிஜாகருடத்வஜா பதவனஜா சதுர்ப்புஜா ஹரி நமோ
ஜயாஸுகுணநயா கருணாலயா அகிலமயாஹரி நமோ
ஸதாஸுரவிஹிதா பக்தஹிதா பரமபதா ஹரி நமோ
கணசேஷசயனா மிருதுவசனா வேணுவனா ஹரி நமோ

விருத்தம்.

வசித்தமாதவந் தனேப்போலனந்தன் வெள்ளை
மாமுசலிநீ லவம்பரனி ரேவதிக்கு
ருசித்தநாயகன் குவலயங்கள் மகிழ்ந்திடமு
ரோக ணிக்கித்தலைமகனும்பல ராமனெனவும்
முசித்தலறுதா னுவிலுற்றிரணியனைப் பகைத்து
முன்னவன்றன்சுதன்மித்ர னுயமாராமிர்தம
பொஜித்திடவீந் தொருவனைப் மால்வடிவானன்
புவனமெல்லாந்தொழ அத்ரிபுத்ரனுமதியே.

மூன்றாவது

சந்திரன் வரம்பெற்ற அத்தியாயம்.

முற்றிற்று.

ஆகதிரு விருத்தம்-சு கீர்த்தனம்-கூ

---

நாலாவது

## கெருடோபாக்யானம்.

---

விருத்தம்.

தேவேசனின்வசனா மிர்தமுண்டின்னங்
திர்ப்தியிலேன்முன்வைன தேயன்வந்திங்
கேவேண்டிப்பெற்றதப வித்திகேட்க
இச்சித்தேனென்றுநா ரதர்வினவ

மாவேதன்கர்பித்த காசிபப்பிரம்
மாமனைவிபதின்மூவ ரவரில்வாசப்
பூவேந்துகுழல்வினதை புத்ரன்காதை
புராந்தகர் நாரதமுனிக்குப் புகல்கின்றாரே.

கண்ணிகள்.

இராகம்-மணிரங்கு சாப்புதாளம்.

காசிபற்குரிய மாதரில்வினதை கத்ருவென் றிருவர் கற்புள்ளகனதை
யேசிறந்தவர்க ளவரொன் றுக்கொன் று இணைபிரிந்திடா தநாளினிலன் று (க)
வஞ்சவெண்ணமுள்ளாள் கத்ருமின்னாளே மகிழ்ச்சியுள்ள வினதை ஒரு
[நாளே
அஞ்சவேயடிமை கொண்டிடநாடி அருகில்வரவழைத்து அறைவள்
[வாதாடி (உ)
அன்னமேவினதை மாதேயென் தங்காய் அதிசயமொன்று கண்டேனடி
[நங்காய்
யென்னடிநீய திப்போதுசொல்வாயே எங்கேகண்டாயடி யியம்புவாய்
[நீயே (ங)
இந்திரன்வெள்ளைப் பரியதுதானே இருண்டகறுப்பா யிருக்கக்கண்டேனே
விந்தையிதுவோ அதிசயங்கண்டாய் வீண்பொய்யுன்கண்ணுக்கு வெள்
[ளெழுத்துண்டா (ச)
உண்டோசுவர்முட்டவெள்ளெழுத்தோது ஒருக்காலும்நீகண்டதில்லை
[யிப்போது
அண்டையிலேநின்றனேத்தும்பார்த்தேண்டி அதட்டுகிறாயிந்த ஸாகாச
[மேண்டி (ரு)
ஸாகசமென்னடி பந்தயங்கேளு தப்பானலென்னைநீ யடிமையாயாளு
ஆகட்டுமெய்யானல் நானுனக்காளே அங்கேபோய்பார்ப்போ மடியக்கா
[நாளே (சு)
காளையேபார்ப்போ மடிமைத்திடத்தை நடத்தாதாரீவ ரமிர்தகடத்தை
ஆளாகமாட்டாற் கிதுதான்னயமே அமராரறியயிதேபந்தயமே (எ)
என்றேயிருவரும் பந்தயம்போட வுறிதவஞ்சகஞ்செய்ய கத்ருதேட
அன்றேஅவ்வேளையி லசுவத்தில்தானே அங்கேபவனிவந்தா னிந்திரன்
றானே (அ)

விருத்தம்.

பவனிவந்தயிந்திரன்வெண் பரியைக்கத்ரு
பாலகனாந்தட்சான்று யுரையாலங்கு

தவவினதைபார்வைக்குக் கறுப்பாய்த்தோணச்
சந்திரனேருகுமறைத் ததுபோல்மூட
கவலையுற்றுத்தலைகவிழ்ந்தாள் வினதைஅன்றே
கத்ருவவள்தனேயடிமை கொண்டுயேவி
அவதிசெய்யும்நாளில் காசிபபிர்மாமுன்
அவ்வினதைசென்றுநின்று அறைகின்றளே
பதம் இராகம் சகனு-தாளம் சாப்பு.

பல்லவி.

சரணம் சரணம் ஸரோருகவாசா
தர்காத்தருள்செய்குவீரென்பிராணநேசா

அநுபல்லவி.

அரவணைத்தாட்கொள்ளு முநவெனக்காரு
அபயம் அபயம் அஞ்சலென்றுகண்பாரும் சரணம்.

சரணங்கள்.

இந்திரன்வெண்குதிரையைக் கறுப்பாகக்காட்டி
யேதோமாயம்செய்து யெனேமயல்மூட்டி
பந்தயம்போட்டடிமை கொண்டாள்கத்ரு
பஞ்சபடாப்பாடெல்லோம் படுத்துகிறுள்சத்துரு சரணம்
அமிர்தங்கொடுத்தால் தொண்டுநீங்குமிப்போது
அல்லாவிடில்யென் னுளும்விடாள்வாது
இமையவர்காக்குமவ் வமிர்தகடத்தை
யெவர்தருவாரென்று வந்தேனிவ்விடத்தை சரணம்
எத்தனேகாலம் வெள்ளாட்டியாய்நோவேன்
யேசும் சக்களத்திக்கோ அடிமையதாவேன்
நித்தமுமுயிர்விட நினேக்கிறேன்னுனே
நீதிதவறலாகாதென் றஞ்சுகிறேனே. சரணம்
நம்பும்பேதை யிங்குவந்ததுகாணுள்
நாடினுலிப்போதே வாங்குவள்வாணுள்
கும்பாமிவள்மைந்த ராலுமோனேவேன்
கோகோஅன்னியாயமிக் கொடுமைக்கென்செய்வேன். சரணம்

விருத்தம்.

காசிபர்தங் கருத்துக் கனிந்திடப்
பேசியஞ்சிப் பிழைஅறு கற்பினுள்
மாசிலாத வினதை மனமகிழ்ந்
தேசிறந்திடும் செப்கை யியம்புவார்

பதம் இராகம் - வாஸ்பதி-ருபகதாளம்.

பல்லவி.

வாராய்பெண்ணே வினதை - வருமுனக்கேகனதை

அநுபல்லவி.

யோதிதுகொடுமை - உன்னை அடிமைகொண்டகடுமை வாராய்

சரணங்கள்.

கத்ருவின்மைந்தர் யுக்தியாலிந்த
வெற்றியேசெய்து தொண்டாய்உன்னைப்
பத்தினள்சிக்கிக்கொண்டாய் அதுகண்டாய் வாராய்
அந்தவாறுநீ உந்தன்மாதவ
மைந்தனுலிது நீங்கும் கண்ணீர்
சிந்தாதேபகை யெங்கும்-உன்வாழ்வோங்கும் வாராய்
ஆவலாய்நம்மை மேவுவார்பதின்
மூவரிலும் மேலாவாய்யினி
யோர்வருத்தமும் மேவாய் அடிபாவாய் வாராய்

விருத்தம்.

யென்றுகாசிபர்சாலு பிண்டமீந்தார் யேந்திபுண்டுகெர்ப்பமாய் வினதை [மாது
அன்றுநாலண்டமீன் றுளிரண்டு அழுகியதுஒன்றரையா யருணன்தோன்ற
துன்றுமற்றென்றதனில் செருடன்கோடி சூரியோதயம்போல வவதரித் [தான்
யென்றுமகிழ்காசிபர் கண்டத்ரியாதிக் கிந்தமைந்தன் மகிமையெடுத்தி யம்புவாரே

பதம் இராகம் - அம்சதுவனி - ரூபகதாளம்

பல்லவி.

வினதைபுத்ரனிவனே ஸாமவேதரூபமானவனே

அநுபல்லவி.

கனமாம்பிரணவாக்ஷரம் முகம் காயத்ரியேசிரஸாமெனுஜகம் வினதை

சரணங்கள்

ஸ்தோமரிக்கதுநேத்ரம் சொல்லும்சந்தஸாகாத்ரம்
வாமதேவிமயமேதேகம் வளர்பிரகத்ருதம்சிறகாம்மாத்ரம் வினதை
மதியிலுயர்ந்துசெழிப்பன் மாதாவின் துக்கமொழிப்பன்
அதிவஞ்சகத்ருமைந்தர் அடங்கலுமஞ்சஅழிப்பன் வினதை

தேவரும்புகழ்சீலன் தேஜஸ்உயர்ந்தபாலன்
யாவருந்தரிசித்துமகிழ வதிப்பிரதாபனுமனுகூலன் வினதை

விருத்தம்.

தந்தையிதுசொல்லமைந்தன் நமஸ்கரித்து
ஜாடராக்னியைத்தீர்த்து யேவல்கொள்ளும்
யெந்தையேயெனப்பால கில்யர்வாழும்
யெழிற்றடத்தில்கூர்மமொன்றுண்டதைப்பொஜித்து
நிந்தையறுந்தாய்குறைதீர்த்திடத்தவஞ்செய்
நிலம்புகழும் ஸத்யகிரி தன்னிலென்று
சிந்தைமகிழ்ந்துரைத்தபிதா வனுக்ஞைபோலே
செல்லவெழுந்தான்வைன தேயன்றனே.

கண்ணிகள்.

இராகம்-காபி ஆதிதாளம்.

வைனதேயன்சிறகடிக்கொண்டு வானத்தைமுட்டினான்-சூரிய
மண்டலத்துக்குமப்பால்பறந்து வட்டமிட்டெட்டினான் (௧)

தைரியமாகபாலகில்யர் தபஞ்செய்யுமிடமே-வட
தருவொன்றண்டத்தைமுட்டுமதன்பால் தன்னிலோர்தடமே (௨)

அத்தடத்திலோர்கூர்மமிருந்த ஆண்மையுடையதே-அது
அங்கிருந்துதபஞ்செய்யுமருந் தவர்க்குத்தடையதே (௩)

அந்தக்கூர்மத்தைப்பாய்ந்துமூக்கில்கொண் டாலில்தாவினன்-அந்த
ஆலினுயர்ந்தவாதொன்றினி லிருந்தருந்தமேவினன் (௪)

இந்தபாரத்தால்வாதுமளம ளென்றுமுறிந்திட-இந்த
யெட்டுத்திசையுஞ்செவிடுறப் புவியெங்குந்திடுக்கிட (௫)

இற்றவாதுபாலகில்யர் மேலேவிழுந்திடும்-யிவர்
யேதும்சபிப்பரிப்போதுநம் தெண்ணமெல்லாங்கெடும் (௬)

உற்றறிதுவென்றிற்றவாதை ஒருப்ட்சத்தொடுக்கி-மற்ற
ஒருபட்சத்தில்உண்ணுங்கூர்மத்தை உள்ளுறவடக்கி (௭)

பறந்தானந்தபாலகில்யர் பார்த்தாசீர்வதித்தார்-யிந்த
பாரினிலேவெல்வாரிலையெனப் பரிவோடுஸ்துதித்தார் (௮)

சிறந்தானந்தக்கூர்மத்தைஉண்டு திர்ப்தியாய்மகிழ்ந்தான்-அதி
சீக்ரமாய்ஸத்யகிரியினில்தபம் செய்திடவேவந்தான் (௯)

விருத்தம்.

கெருடனிவ்வாறுஸத்ய கிரியில்வந்து கனமுயர்ந்தஸத்யதீர்த்தத்திலாடி
அருடகுபிதாவுபதேசஞ்செய்திட்ட அஷ்டாக்ஷரத்தைஜபித்தரியைநோக்கி

MADRAS ARCHIVES LIBRARY EGMORE, MADRAS-8
4321

கருதியேகாக்ரசித்தமாய்நித்ரையா காரமற்றுத்தவஞ்செய்யக்கருணைவேக வருஷதாரையெனப்பொழிந்துவிண் விமானத்திலெழுந்தருளிவந்தார் மாலே

பதம் இராகம்-மணிரங்கு சாப்புதாளம்.

பல்லவி.

மணிமயவிமானத்துள்வந்தருளினர்

அநுபல்லவி.

பணியுங்கெருடன்மேன்மேலே பண்ணியதபத்தினாலே

சாணங்கள்.

சுத்தமுக்தாலங்கிர்த விசித்ரவிஸ்தார
தோரணஸ்தம்பப்ரவாள சோபனாகார
சித்ரசோபிதவிதான சத்ரசாமரகேதன
ரத்னஸோபான விம்மாஸனப்ராகாசாதிஸ்ரீங்கார மணிமய

சாதுரியஹிதவர ஸாம்ராஜ்யஸய்யோக
ஸாதகயிஹபர ஸந்தோஷவைபோக
மாதுரியசீதள ஸுகமஞ்சளமிருதுள
சுகவசனவனஜாஸன ஸ்ரீவக்ஷஸ்தலராக மணிமய

சங்கசக்ரகதாகட்க சார்ங்கதாரணா
ஸச்சிதானந்த னித்யரானபூரணா
மங்களகிர்பாகடாக்ஷ வீக்ஷணஞானமிர்த
ப்ரவாகபூர்ணஸாகர ப்ரதாபஜகத்காரணா மணிமய

விருத்தம்.

எதிரேவருமா, மதுசூதனரைக்,
கதிசேர்கெருடன், ஸ்துதிகூறுவனே.

பதம்-இராகம்-தன்யாஸி-ரூபகதாளம்.

பல்லவி.

ஸ்ரீநாயக ஜகத்குரோநமோ தேஜோமய ஸுராவரோநமோ

அநுபல்லவி.

ஞானகாரக்னதர்த்தே நமோ நாராயணஸவிதாக்ர்த்தே நமோ ஸ்ரீநாயக

சாணங்கள்.

மதுகைடவபேதன நமோ மாதவாமது ஸூதனநமோ
அதிஸுந்தர விபுவேநமோ அக்ஞானதமோரவே நமோ ஸ்ரீநாயக
ராஜஸகுணவேதா நமோ நமஜகஸ்ரிஷ்டிநாதா நமோ
தேஜோமயஸாப்திகா நமோ ஜகரக்ஷகமூர்த்தியே நமோ ஸ்ரீநாயக

தாமஸகுணகாத்ரா நமோ ஸம்ஹாரபாலனேத்ரா நமோ
நேமவிராட்ரூபா நமோ நிமலாபத்மநாபா நமோ ஸ்ரீநாயக

விருத்தம்.

ஸ்துதித்தகெருடனை நோக்கியேபாலானின்
ஸ்துதிவேதோப நிஷத்மகாவாக்யார்த்தம்
மதித்தவர்வாக்காகக் கேட்டன்பானேம்கேள்
வரம்வேண்டுவதுவென்ன மாலேனீவந்
துதித்ததர்சனம் பிர்மாதிகட்குமெட்டா
துயர்ந்தேன்கிர்தார்த் தனுனுள்ளத்தன்பு
மதித்தடையும்பேறு வேறறியேனென்று
வைனதேயன்பின்னும் வழுத்துவானே.

கண்ணிகள்.

இராகம்-ஸாரங்கா-ஆதிதாளம்.

சரணஞ்சரண மென்கோவே
சராசரஸகல ஜகாட்சகர்த்தாவே (க)
பரமனே யானேழையின்று
பகர்ந்திடும் விண்ணப்பமொன்று (உ)
காசிபபிர்ம்மா புத்ரன்யானே
கருடனெனப் பேர்கொண்டேனே (ங)
பேசுமென்றாய் வினதை இளையாள்
பெரியதாய் கத்ருவென்னுங் கிளையாள் (ச)
யெனதுதாயைத் தானேவாதாய்
யென்றுமடிமை கொண்டாள்சூதாய் (ரு)
மனஸூனொந்தே தினமுமெங்கும்
வகைக்கமிர்தங் கொடுத்தால் நீங்கும் (சு)
யென்றுசிந்தித்தடியேனே
யெனதுதந்தைஅருளால்த்தானே (எ)
குன்றமிதில்தபமுற்றேன்
கோவேயானின் ஸேவைபெற்றேன் (அ)
சதுர்முகனுதிவிபுதர்
ஸனகனுதியாந்தாபதர் (கூ)
முதலெவருங்காணரின்னம்
மூர்த்திநின்திவ்யதர்சனம் (க0)
கண்டவென்றாய்குறைதீர்த்துக்
கருணைசெய்வீரின்னம்பார்த்து (கக)

அண்டர்ஸ்துதிக்கும்ப்ரதாபா
ஹரிஸச்சிதானந்தரூபா (கஉ

விருத்தம்.

வந்தித்தகருடாகேள்மகாமேருவின்
மத்தியிலுன்னதமகா மார்க்காக்ரத்தில்
முந்தித்தேவர்க்கிந்த வமிர்தசேஷம்
முன்னமரர்காக்கவொரு கடத்தில்வைத்தோம்
சந்தித்தாமதருளா லவரைவென்று
தைரியமாயமிர்தகடந் தனைக்கைக்கொண்டு
நிந்தித்தகத்ருமுன்வைத் துன்தாய்தொண்டு
நீக்கெனமற்றுஞ்சொல்வர் நெடுமால்தானே.

பதம் இராகம்-பியாகடை ஆதிதாளம்.

பல்லவி.

கருடாகேள் அமிர்தமிப்போதே-அந்த
கத்ருபுத்ர ஞுண்ணத்தகாதே.

அனுபல்லவி.

திருடனுய்வர்துண்டா னரக்கனெருவனன்று
சிதைத்தோமிருகூறாய் திரிந்தலேகிறுனென்றும் கருடா

சரணங்கள்

உம்பர்க்கல்லால்மற்றோர்க் கெட்டாதுகத்ருவிடம்
ஒப்பிவித்துன்தாயை மீட்டொதுங்குவதுன்கடன்
முன்போலெதாஸ்தானம் சேருமமிர்தகடம்
மோசஞ்செய்தவர்க்கு மோசம்வருமேஉடன் கருடா
கத்ருமைந்தர்க்கெல்லாம் சத்ருவாவாய்நீயே
கண்ணிலுனேக்கண்டால் களைப்பாருன்சாயையே
மிர்த்யுவாமவருக்கு அவரையேஉண்பாயே
விழிமுன்விஷமெதுவும் ஒழியும்உந்தனுலேயே கருடா
அஷ்டதிசைநாகர்நம் பக்தரானதினுலே
அவரைஒன்றுஞ்செய்யாதே அணிவாய்பூஷணம்போல
இஷ்டமுடனேயென்றும் நமதுவைகுந்தத்திலே
இருப்பாயுனேவாகன மெனக்கொள்வோம்புவிமேலே கருடா
இப்போதுபசியுற்றால் உத்தாஸாகரத்தி
லேகிராதகரைஉண்டே தீர்ப்பாயுதரத்தீ
எப்புவியுமறிய இந்த மெய்யபுரத்தி
லெனேப்போல்பிம்பம்வைத்தே பூஜிசிக்கிரத்தில் கருடா

விருத்தம்

கேசவனீ தருளிவைகுந் தமுற்றூர்மெய்ய
கிரியிலன்றே மாயனுரு வமைத்துவைத்து
பூசைசெய்துத் தரஸாக ரத்திற்சென்று
பொருகிரா தகரைஉண்டு தைரியங்கொண்டு
தேசமகிழ் மேருவுற்று ஸுரரைவென்று
செழித்தமிர்த கடங்கிரகித்து கருடன்மித்யா
வாசகஞ்சேர் கத்ருமுன்வைத் தடிமையான
மாதாவை மீட்டுமன மகிழ்ந்திட்டானே.

**கண்ணிகள்.**

இராகம் - உசேனி ரூபகதாளம்.

கத்ருமுன்வைத்த அமிர்தகடங்கண்டாள் கடமப்போதே
காணுமல்போக கலக்கமதுகொண்டாள் (௧)
வெற்றிகொண்டுவினதை மீறினுள் கத்ருமந்தரை
விரட்டிவிரட்டி கருடன் சீறினுள் (௨)
காலினுலும் மூக்கினுலுமே உரகங்களையே
கண்டதுண்ட மாக்கிமேலுமே (௩)
நாலுதிக்கிலும் சிதறவோட்டினுன் பதுங்கிஒதுங்கி
நாகங்களெல்லாம் நடுங்க வாட்டினுன் (௪)
ஆதிசேஷனும் அஞ்சவேயடுத்தான் ஸர்ப்பமாலைகள்
அணிந்துஹரியை தோளிலேயெடுத்தான் (௫)
ஜோதிமயமாய் விளங்கித்தோற்றினுன் ஹரிகிர்ஷ்ணவென்று
சுபத்வனிசெய்து ஸ்துதிகள் சாற்றினுன். (௬)

விருத்தம்-

வினதைபுத்திரன் மெய்யபுரிதன்னில்
தினமிருந்து செழித்துத்தவஞ்செய்து
தனதுதாய்குறை தாழப்பட்சீசனுய்
மனமகிழ்ந்தரி வாகனமாயினுன்.

விருத்தம்.

உற்றகெருடன்மா, வெற்றியோதினேம்,
ஸத்யரிஷிவரம், பெற்றதோதுவாம்.

நாலாவது

கெருடோபாக்யானம்.

**முற்றிற்று.**

ஆகதிரு விருத்தம்-௧௧ கீர்த்தனம்-௧௦

## ஐந்தாவது
## ஸத்யதபோபாக்யானம்.

கலித்துறை.

ஹரசிவசம்போ கருடன்கதைகேட் டகமகிழ்ந்தேன்
வரமுயர்ஸத்ய ரிஷிதபஞ்செய்த மகிமைதன்னை
உரைசெய்தவீரென்று நாரதர்கேட்க வுளமகிழ்ந்து
பரையொருபாகமு வந்தமகேசன் பகருவரே.

பதம் இராகம்-யமுனைகல்யாணி ஆதிதாளம்.

பல்லவி.

ஸத்யரிஷிசெய் விதமேகேளும் தரணியிலற்புதமே

அநுபல்லவி.

நித்யமிமயகிரி வடபதவாரத்தில் நிறைந்துபுஷ்பபத்ரா நதிவருதீரத்தில் ஸத்ய

சரணங்கள்.

தீரமதனில்பத்ரவடமூலத்திற்சித்ர
சிலாசனந்தனிலிருந்தே-பாரா
வாரமானஜன்மவியாதிக்கிஹரிநாமா
மிர்தமேமருந்தே-யென்று
நேரும்ஜபஹோமதர்ப்பண
ஹரிநாமநிஷ்டைசெய்வதுமேநித்யம் அவர்
நேமம் ஓர்நாள் ஸமித் தறுக்கும்போதவர்தங்கை
உடன்சேர்த்தறுத்தார்விர லொழிந்ததுறுந்துமங்கே ஸத்ய
ஒழிந்தகைவிரல்ஸமித்துப் போல்பொடிப்
பொடியாயுதிர்ந்துமாம்ஸம் துவக்கஸ்தியுடன்
வழித்திடும்ரத்தங்க ளில்லாமலும்முன்போலே
வளர்ந்ததேவிர லேந்துமுற்றி அன்று
எழுந்தங்குவந்து கெந்தர்வரிருவர்கண்டு
யிந்தப்புதுமையை யிந்திரனுக்கோதவன்புகொண்டு
மொழிந்தானிந்திரன் ஹரிக்கியிருவருமே அந்த
முனிமுன்சென்றுரதை மொழிந்திடுவோமேயிந்த ஸத்ய
வந்ததிருமால் வராகமாய்யெய்தஅம்பு
மார்பில்தைத்ததுபோலேதோணவே
இந்திரன்ஒருவேடனாய் வில்லுங்கையுமாய்த்
தொடர்ந்தேமுனிமுன்னாலே வந்துநின்று

யெந்தனம்பாலெய்த பன்றிவந்ததேயெங்கே
இயம்பிஉமதுநாமந் தனைநிஜமாக்குமிங்கே
வந்தயென்ஸம்ஸாரந் தனைப்பாரும்பிழையாதே
வயற்றின்பசியாலென்ருன் மாயவேடனப்போதே ஸத்ய

விருத்தம்.

முனியிவைபார்த்திதுதர்ம ஸங்கடம்மெய்
மொழிந்தாலோபன்றிசாம் பொய்சொன்னலோ
இனியிவர்வாடுவர்பசியால் பொய்யனுவோம்
யிதுதெய்வசோதனதர்த்தமென்றெண்ணி
தனியான்யானேயாம் கேட்பதிங்கார்
சாற்றுவதாரறிந்து கொள்வா யென்ருர் அந்த
த்வனிமொழிகேட் டெவந்தரியும்யிந்திரனும்முன்
தோற்றினர்ஸத்யரிஷி ஸ்துதிசெய்தாரே.

கண்ணிகள்.

இராகம் யெதுகுலகாம்போதி.

பகவன்விஷ்ணுபக்தவத்ஸலாநமோநமோ
பங்கஜாக்ஷபாதகரதலா (௧)
ஸகலலோகநாததற்பராநமோநமோ
சங்கசக்ரசார்ங்ககதாதரா (௨)
கருடத்வஜ கமலநாயகா நமோநமோ
கருணநிதே மோக்ஷ தாயகா (௩)
பரமானந்தக் ஞானநிஜபரா நமோநமோ
பரந்தாம புராத னஸ்திரா (௪)

விருத்தம்.

புகழ்ந்தின்னம் வெகுவிதமாம் வேதாந்தார்த்த
பூருவமாய் ஸ்துதித்திருகை சிரமேற்கூப்பி
யுகந்தபுள காங்கிதனு னந்தபாஷ்ப
மொழுகமொழி குளறிநமஸ் கரித்துமாலே
இகந்தனிலித் திவ்யதரி சனம்நீங்காமல்
யென்றும்ஸே வித்தற்சித் திருக்கவேநற்
சுகந்தருவீ ரெனஸத்ய முனிவன்வேண்டத்
தோற்றியமா லருள்புரிந்து சொல்கின்ருரே.

பதம் இராகம் - சங்கராபரணம்-ரூபக-சாப்பு-தாளம்.)

பல்லவி.

ஸத்யரிஷியேகேள் தினமும் ஸேவைதருவோம் தன்யனுவை

அநுபல்லவி.

நித்யமும்சாமே நீங்கியிராமே ஸத்ய

சரணங்கள்.

மகிமையானஉன் தபசிலைநாடி மாமகிழ்ச்சியதுகொண்டு-உந்தன்
மனதினுண்மை யைக்கண்டு வந்தேமென்று ஸத்ய
இத்தலமீது புண்யஸ்தலமுற்ற தனேகமதிற்பலகோடி-யுக
மேதவஞ்செய்தெமைத் தேடிக் காண்பர்நாடி ஸத்ய
இன்றுதவஞ்செய்வோர்க் கிக்கணமேபல மீவதுஸத்யவெற்பாமே-அதி
லேயேஸானித்யம் செய்வோமே என்றும்நாமே ஸத்ய
இந்தயிமயம்விட் டேஸத்யவெற்பினுக் கேகுநாமுங்கூடவருவோம்-அங்கே
யென்றென்றுமேமகிழ்ந் திருவோரு மமருவோம் ஸத்ய
பத்ரவடதருச் சித்ரசிலைபுஷ்ப பத்ராநதியிலுமுறவாய்-அன்பு
பண்ணுகிறுய்நன்றி மறவாய் இனிப்பிறவாய் ஸத்ய
இந்திரவிமானத்தி லேறுசிலைதரு யிவ்வயிராவதந்தருமே-நதி
யேனமதாக்ஞையில்வருமே வந்தமருமே ஸத்ய
ஸத்யவெற்பிற்சேஷன்சந்திரன் கெருடன் தவஞ்செய்துடனேசந்தோஷ [வரம்
தான்பெற்றிட்டாரீதே வாஸதிவ்யதேச ஸத்ய

விருத்தம்.

மாயவனீதருள்புரிந்து கருடன்மீதும் மகபதிமாமுனியிந்திர விமானமீதும்
தூயசிலைதருஅயிரா வதத்தின்மீதுந் துலங்கப்பாதாளவா கினியதாக
வேயிலைசேர்புஷ்பபத்ரா நதிமுன்செல்ல இமயம்விட்டெழுந்துஸத்ய கிரி [யில் வந்து
நேயமுனிதிவ்யால யமதுண்டாக்கி நெடுமாலைப்பூஜித்து நிலைபெற்றுரே.

கண்ணிகள்.

இராகம் - சங்கராபரணம் ஆதிதாளம்.

ஸத்யரிஷியும் மாலும்யிந்திரனும் பத்ரவட
தருவும்சித்ரசிலையும் கொண்டு-புஷ்ப
பத்ராநதியுடனே யிமகிரிவிட்டுஸத்ய
பர்வதந்தனில்வந்தார் பண்டு (க)

சாக்ஷு-ஷ மனுக்காலம் இரண்டாம்யுகம்
வைசாக சுக்லபஞ்சமி ரவிவாரம்-அதில்
நாட்செய்புஷ்யம்ஸித்த னுமயோகம்பா
லவகாணம்ஸிம்ம லக்னமாம்சுபசாரம் (௨)
ஆனசுபவேளையில் வந்துஸத்யதீர்த்தத்
தருகில்பத்ரவடத்தை ஸ்தாபித்தார்-என்றும்
வானவர்புகழ்புஷ்ப பத்ரைஸத்யதீர்த்தத்தில்
மருவஸ்நானஞ்செய்து சோபித்தார் (௩)
சித்ரசிலையினல் விமானமும்மூர்த்தியுஞ்
செய்யென்று மாமுனியை நோக்கியே-திருமால்
உத்தரவுசெய்யுமுன் விசுவகர்மாவந்தேத்தி
உயர்ந்தமூர்த்தியை உண்டாக்கியே (௪)
அதிஸௌம்யமனே கரனயனனந்த
தாயகமாம் அர்ச்சா-ரூபம்
உதயமானபின் ஸோமச்சந்தவிமானமென்
றுண்டாக்கியேநாமம் வைத்தார் (௫)
வெகுவிஸ்தாரப்ரா காரதுவாராலயம்
விளங்கச்செய்து தக்ஷிணதுவார-மதில்
மகிமைசேரும் வைஷ்ணவியையும்
கெற்பக்கிரகமதற்கு தக்ஷிணத்ததிகார (௬)
தண்டகனுமனும் பிர்குவும்பிர்ம்மாவும் வாமம்
தனில் கருடனும் வெளிப்ராகாரத்-தொழில்
கொண்டவாசலின் தெர்க்கின்மணிகனும் வாமத்திற்
குலவுமஸந்தியும் ரெண்டாந்துவாரம் (௭)
தன்னில்த்துமிகினமும் நந்தகமும்நவக்ரகமும்
தாதரையும் மூன்றும்பிராகாரம்-அதில்
மின்னுந்தெக்ஷிணசக்ர சூளகம்வாமத்தில்
விளங்குஞ்சங்க சூளகஞ்சேர (௮)
பூமியுங்லக்ஷுமியும் கருடனும்ரோகிணியும்
புகழுமிந்திராதி பாலகருங்-கனம்
ஆழுயர்ஸப்தமாதரும் ஸப்தரிஷிகளும்
அஷ்டவஸுவும் பலிரட்சகரும் (௯)
தட்சகனுமனும் புஷ்யனும்சுப்ரமண்யனும்
ஸரஸ்வதியும் பஞ்சபூதங்களும்
பக்ஷமாம்துர்க்கை விஷ்ணுபூதமரித்வஜம்
ஸ்தாபனஞ்செய்தார் மாமறையோத (௧௦)

விருத்தம்.

ஆலயமுந்தெய்வஸ்தா பனமுமிவ்வா
றமைக்கஹரி அரனையும்விதியையும் ஸ்மரித்தார்
ஞாலமருள்விதிமுனிவர் சூழவந்து
நமஸ்கரித்தற்சித்தஷ்டா க்ஷரமந்த்ரத்தால்
சீலமுறுவைகா னஸப்ராகாரம்
சிறப்பொடுஸம்ப்ரோட்சணைசெய் தேஸேவிக்க
மாலருளாய்ஸத்யரிஷி தன்னைப்பார்த்து
மகிழ்ந்துஉயர்வாமுதவி வழுத்துவரே.

பதம் இராகம்-சகனா ஆதிதாளம்.

பல்லவி.

ஸத்யரிஷியேகேளாய் மாதவம்செய்த
ஸத்யரிஷியே கேளாய்

அநுபல்லவி.

இத்தரணியில்யார்க்கும் இதமாகவேநோக்கும் ஸத்ய

சரணங்கள்.

ஸத்யத்தைஸ்தாபித்த ஸத்யக்ஷேத்ரமிதில்
சித்ரசிலாமயமாம் சுத்தநமதுபிம்ப
ஸத்தியமூர்த்தியைஅன்ய சித்தமில்லாமல்சிரத்தா
பக்தியுடனேஆராதித்துப் பணிந்துபிரு ஸத்ய
உற்றபுரூர்வசக்ர வர்த்திவந்துநமையற்
சித்து ஆராதனையால் முக்திபெறுவன்நம்மி
டத்திலொருகிங்கரன் பெற்றஸர்ப்பரூபம்
அற்றுமகிழவன்ஸாமீ பத்தைஅடைவைநீயும் ஸத்ய
பத்ரவடமிதுப்ர ஸித்தமதாய்வடம்அச்
வத்தமபுத்ரதீபம் உற்றபனஸமாம்
யுகத்தின்கிரமமாய்த்தானே நித்தியம்நாமுமிங்கேஸா
நித்யஞ்செய்துரக்ஷிப்போம் உத்தரமிதுவாமே ஸத்ய

விருத்தம்.

அரியிவைகூறிப்பிர்ம்மா திகளோடேக
அவ்விம்பத்திந்திரஸகா யத்தால்ஸத்ய
இரிஷிஸத்யகிரியில்வந்த மாமாலைப்பூ
ஜித்தென்றும்மகிழ்ந்திருந்தா ரிவர்முன் சார்ந்த
கரியசிலைஹரிவடிவாய் தரு மாலன்பு
கலந்துயுகமொருவடிவாய்க் காண ஆரும்
பெரியபுண்யதீர்த்தமுற்று மகிமைசேரப்
பெற்றதுமேலோரைபுற்ற பெருமையீதே

குறுவிருத்தம்

ஆர்ந்துஸத்ய அருந்தவர்க்கருள்
கூர்ந்துமால்வரங் கொடுத்ததோதினேம்
சார்ந்துபுரூருவச் சக்ரவர்த்திதா
னேர்ந்துபூஜித்த நிகழ்ச்சிகூறுவாம்.

ஐந்தாவது

ஸத்யதபோபாக்கியானம்.

முற்றிற்று.

ஆகதிரு விருத்தம்-௬-கலித்துறை-௧-கீர்த்தனம்-டு.

---

ஆறாவது

## புரூர்வோபாக்யானம்.

விருத்தம்

சம்போஸத்யரிஷி மகாத்ம்யஞ்சொன்னீர்
சாற்றுபுரூர்வச் சக்ரவர்த்திகாதை
யும்போதிப்பீரென்ன வவன்புதன்புத்ரன்
புண்யசுலோகன் மெய்தர்மங்கீர்த்தி
கும்போத்பவரும்புகழும் மகாவித்வானும்
குவலயங்கள் ஸ்துதிக்குந்தென் மதுரைதன்னில்
அம்போதிசிறமாலை மானஸாரா
தனஞ்செய்தானென்னமுனிக் கரன்சொல்வாரே,

பதம்-இராகம் வஸந்தா - ஆதிதாளம்.

பல்லவி.

மானஸாராதனம் மகிழ்ந்து செய்தான்தினம்

அனுபல்லவி.

தானமர்ந்திடு புரூருவசக்ரவர்த்தி முக்திமேவ மானஸ

சரணங்கள்.

ஆதிமகாகூர்மகாத்ரம் ஆசனமாய் பூஜாபாத்ரம்
ஆதிசேஷன்பணவலி ஆகவேமதித்தாவலின் மானஸ
ஸாகரங்களே கோக்ஷீரம்-ஸஸ்யவனங்களாகாரம்
மாகஸூத்ரங்கள் துய்ய-மலராகமதித்துய்ய மானஸ
ஆதித்யர்க ளாபரணம்-அமர்ந்திடும் சீதகிரணம்
மோதுசந்திரன் கர்தம்வஸ்தாம்-மொழியுர்திக்குகளாய்ப்ரியம் மானஸ

நாகமேகங்களே தூபம் நவக்ரகங்களுயர்தீபம்
ஆகஎந்தும் நிறைமாலை அங்கெதிர்வைத் தன்பினாலே மானஸ
அறைநதிகளே பானீயம் அர்க்யபாத்யா சமனீயம்
மறைபுகழும் புண்யதீர்த்த மலர்த்தடங்களாயெதார்த்த. மானஸ
அஷ்டமாகுலாசலங்கள் அபூபம்மற்ற அசலங்கள்
இஷ்டமாம்மது பற்கத்துக்கே வெல்லக்கட்டியாய் வைத்து மானஸ

## விருத்தம்.

இப்படியே மானஸா ராதனஞ்செய்
திடவொருநாள்மதுபற்கம் சேர்க்கும்மன்னன்
கைப்படுவெல்லக்கட்டி தவறியேபாற்
கடலில்விழப்பால்சிதறி மாயன்மார்பி
னில்ப்படியத்தன் றுயிலா விறைதுடைக்க
யிதுபுதுமையென்றுபா லாழிதன்னில்
மைப்படிமேனியர் நகைக்கவஃதேகாந்த
மானதிருமகள்கேட்டு வழுத்துவாளே.

பதம்-இராகம்-கீரவாணி ஆதிதாளம்.

## பல்லவி.

சரணமென் பிராணநாதா ஜலஜமாமலர்ப்பாதா

## அநுபல்லவி.

ஹரிஅத்புதவினோதா அச்சுதாவரப்ரஸாதா சரண

## சரணங்கள்.

மகாசுத்தன்புரூர்வசக்ர வர்த்திபுண்யசுலோகவுக்ர
பகவனம்அபிமானி பாகவதோத்தமஞானி
ஜகமிதிலிவன்போலே சித்தமுண்டோதிருமாலே சரண
அவன்மானஸாராதனே அறியவேசெய்தீர் சோதனை
இவைவெகுஆச்சரியம் யென்னமனோதர்ம்மதைரியம்
பவமறநேரேசென்றே பரமபதமீவீரின்றே சரண
ஓதுமடியாள்விண்ணப்ப மொன்றுதேவரீருடன்செப்ப
ஆதரவாய்க்கேட்கவேணும் அதுசித்தத்துக்கேதோணும்
சோதியேநம்மடியாரைச் சோதனைசெய்வதோமேதை சரண

## குறுவிருத்தம்.

மருமலர்மாது, திருமகளீது,
அருளியபோது, ஹரியிதுஓதுவார்

## கண்ணிகள்.

இராகம்-வாசஸ்பதி ஆதிதாளம்.

பொன்மலர்த்திருவே யென்னனத்துருவே
பூவாய்ப்புவிபுகழ்ந்திடவரு பாவாய்
உன்மலர்வாய்திறந்தேயிதுநாளாய்
ஒன்றுங்கேட்டதில்லை யேசொல்லக்கேளாய் (க)
அடியரிற்சிலபேர் கொடியதைமதிப்பர்
அரனேடெதிர்த்தபத்மா சுரனைபோலெதிர்ப்பர்
படியினிலவரெண்ணம் முடியாமற்றடுப்போம்
பக்தியாய்ப்பணிவோர்க்கு முக்தியைக்கொடுப்போம் (உ)
புரூரவச்சக்ரவர்த்தி மானஸாராதனை
புதுமையற்புதமே அதுசமக்கிதமே
பெருமையாமந்தவிளை யாடலிலானந்தம்
பிறந்தேயென்னையும் மறந்தேனுன்னையும் (௩)
இன்னமுமவன்விளை யாடலின்மேலே
யிச்சைவிடாதே பக்ஷமாமாதே
உன்னுரையாலே அவன்முன்னேபோயின்றே
ஒருவிளையாடல்செய்து வருகுவோம்நன்றே (௪)

## விருத்தம்.

மாலருள்செய்தேகருடன் மீதுஸத்ய
மலைக்கிவந்துவிஷ்வக்ஸே ஞதியோர்கள்
கோலமதாய்ச்சூழ்ந்துவரத் தாமும்பண்டு
கொண்டபெருவராகம்போ லெழுந்துசென்று
ஞாலமகிழ்வைகைவள நாட்டிலுள்ள
நற்பயிரெல்லாமழிக்க நடுங்கியாரும்
மாலமரும் மதுரைதன்னில் புரூர்வசக்ர
வர்த்திமுன்போய்முறையிட்டு வழுத்துவாரே

## கண்ணிகள்.

இராகம் நாதநாமக்கிரியை ஆதிதாளம்.

அபயமபயம் அஞ்சலென்றுளாய்
அரசேபுரூர்வ அதிபதிகேளாய் (க)
சுபமாகவாழ்ந்தோம் தொல்புவிமேலே
துரிதங்களொன்றுமில்லை துரையேஉன்னாலே (உ)
பராராஜராலும் பயமொன்றுங்காணேம்
பாரிலுன்ஆக்ஞையால் பகைவர்க்கும் நாணேம் (௩)

கரிபுலியாளி கரடியின்கூட்டம்
காடெங்குந்தானே காண்போமெதேஷ்டம் (௪)
திரியுமதெல்லாம் திரணமாகப்பிடிப்போம்
செய்திடும்பயிர்களில்த் தின்னுமலடிப்போம் (௫)
அரசேயோர்கிலேச மறியோமின்றேனே
ஆதிவராகமால் சோதனைதானே (௬)
யேதோஅஞ்சாதே யெங்களைசேர்ந்தே
யெதிர்த்துவராகங்கள் யெங்கெங்குஞ்சேர்ந்தே (௭)
சேதமதாக்கிச் சிதைத்ததோட்டை
சேனைகளுடன்வந்து செய்குவீர்வேட்டை (௮)

விருத்தம்.

நாட்டிலுள்ளோர் முறையிடவே வேட்டைக்காரர்
நரபதியேவலில்வரா கங்கள் தன்னை
ஓட்டிவலைகட்டியா யுதத்தால்ச்சாட
உயர்குமுதத்வஜவரா கம்எதிர்த்து
வாட்டிவருவேட்டைக்கா ரர்களையெல்லாம்
மடித்திட மன்னவன்மந்திரி மார்களோடு
மேட்டுமையாய்ச் சென்றுபன்றி யினத்தையெல்லாம்
வெல்லுமெனமந்திரிமார் சொல்லுவாரே.
பதம் இராகம் கமாஸ் ஆதிதாளம்.

பல்லவி.

நாங்கள்சொல்லுஞ்சேதிகேளய்யா-ராஜராஜேந்திரா
நாங்கள்சொல்லுஞ்சேதிகேளய்யா

அநுபல்லவி.

நாங்கள்சொல்லுஞ்சேதிகேளும் நம்புமெங்களையேஆளும்
தீங்கதானமொழியைவிள்ளோம் செப்புமுந்தன்சொல்லைத்தள்ளோம்

சரணங்கள்.

புதனருள்வரபுத்ரனே மாமூடரையும் புத்திபுள்ளோராக்குங்கர்த்தனே
யெதிரெவருனக்குண்டோ யில்லையென்றுலுங்கண்டு
மதியிலெண்ணிப்பாரு வருந்துயர்களைத்தீரு நாங்க
ஒருபன்றிதானேநேர்ந்துவேட்டைக்காரரை ஒருமிக்கக்கொன்றதேபாய்ந்து
வருபன்றிபலகோடி வந்தெதிர்த்தால்க்கூடி
தாரணியிலெதிராரு தைர்யமாயெண்ணிப்பாரு நாங்க

ஆதிவராகாவதாரம் செய்திரண்யா க்ஷனைக்கொன்றாற்போலவேதீரம்
மாதவர்தான்செய்தசூதோ மற்றெவருடவாதோ
யேதோராமிப்போதே யெதிர்த்துவெல்லவொண்ணாதே நாங்க

விருத்தம்.

இந்தவிதமமைச்சர்சொல்லத் தேவாளானு
விறஞ்சுவோம் வராகங்களென்றாற்கொல்லுவோம்
வந்தபயமென்ற வையகங்கலங்க
வாழ்ந்திரோமென்றுகம லாட்சனென்னும்
சொந்தமைந்தன்றனக்குமுடி சூட்டிவைத்துச்
சூழும்ரதகஜதுரக பதாதியோடு
அந்தமன்னன் மதுரைவிட்டெழுந்துதேரூர்ந்
தந்தவராகக்கூட்டங்களைக்கண்டானே.

பதம் இராகம் சுத்தசாவேரி ஆதிதாளம்.

பல்லவி.

மன்னன்புரூர்வ சக்ரவர்த்திவந்து
வராகங்களோடெதிர்த்தான்-பத்தி

அநுபல்லவி.

முன்னேபன்றிப்படை யெங்கேயென்றுபகைத்து
மூன்றுயோசனைதூரம் நிற்கக்கண்டுதிகைத்து மன்னன்

சரணங்கள்.

வந்திடும்சேனைகள்மேல் தண்டுசக்ரந்தோ
மரம்வாள்முஸலங்கள் விட்டார்கண்டு
இந்தஆயுதங்களைத் தூள்தூளாய் நொறுக்கியே
யெல்லாவராகங்களுமே சேர்ந்துதுறுக்கியே மன்னன்

கண்டுகடுகடுத்திட்டான் வில்லைவளைத்துக்
கணைமழைகள் தொடுத்திட்டான்
தண்டுளபத்திருமால் மெய்யின் மாமலர்போலே
தாண்விழக்கண்டுதாவினாரே மன்னன்றேற்மேலே மன்னன்

பாய்ந்துமுன்காலாற் பத்தியே மன்னன்கைவில்லைப்
பறித்துச்சென்றதேயெத்தியே
ஆய்ந்தமன்னன் றேர்விட்டுக் கீழேகுதித்தோடினான்
அந்தவராகந்தன்னைத் துடர்ந்துசென்றுகூடினான் மன்னன்

**விருத்தம்.**

கூடியபன்றியின்மார்பில் வாளால்வெட்டக்
  கொண்டவில்லைப்போட்டுதந்தக் கோதண்டந்தான்
நாடினிலத்திழுபட்டு வந்தமார்க்கம்
  நதியாச்சுவில்விழுந்த காரணத்தால்
ஓடியதுமுக்தகார் முகனதியென்
  றாத்திலுறுசிறுகாயத் துதிரஞ்சிந்தத்
தேடியுத்தரதிசையில் வராகம்போகத்
  தீரமன்னன்பின்றுடர்ந்து சென்றிட்டானே.

பதம் - இராகம் சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி.

துடர்ந்துமன்னன் சென்றானே - தெய்வ ஸூகரன்றனைத்தானே

அநுபல்லவி.

இடந்தவடதிசை தன்னைநோக்கியே முன்னே
யிழந்தவில்லைபுங்கையி லெடுத்துக்கொண்டுபின்னே  துடர்ந்து

சரணங்கள்.

எட்டிநடந்துபோம்போதே பிடிப்பதற்கு
இணங்கும் பிடிபடாதே
கிட்டினல்கண்ணிற் காணாமல்மறையுமோடிக்
கீழேசிந்தியரத்தம் கிடக்குமவ்வழிதேடி  துடர்ந்து
முக்தகார்முகனதிக் கொருயோசனை
மொழியும் வடதிசையதில்
உற்றஸத்பகிரிக் குகையதற்குள்ளேபோக
ஓகோயினிமேல் விடேனெனமனத்துணிவாக  துடர்ந்து
குகையதில்பெரும்பாம்பொன்று மன்னனைச்சுற்றிக்
கொண்டதே தேகத்திலன்று
வெகுகோபமுடன்ஸற்ப மதையுமிழுத்துக்கொண்டு
விரைசாப்பபோகுமுன்பன்றி வெளியில்வந்திடக்கண்டு  துடர்ந்து

விருத்தம்.

வராகமதுவடமூலம் வலிக்கும்ஸத்ய மகாரிஷிமுன் மானுஷர்போல் வார்
[த்தைசொல்ல
விராகமுறுபுருருவர்க் கண்டுமாலின்வேஷமிது வெனமகிழ்ந்து நமஸ்கரி
த்தான்
புராதனந்துர்வாசராற் சாபம்பெற்றுப் போகியாந்தட்சகன் புருருவாவை
இராஜராஜேந்த்ரானின்பாதத்தூளி இனிப்புனிதனானேனென்றிறைஞ்சினா
னே

## கண்ணிகள்.

இராகம்-வாசஸ்பதி. ஆதிதாளம்.

ஸந்தோஷமாகவே தக்ஷகன்புரூருவச்
சக்ரவர்த்தியைக்கொண்டாடி-நிற்க
ஸத்யரிஷிதனே வராகமாகவே
தான்வந்தமாதவன் ஞடி (க)

இந்தமன்னன்வில்லுங் கையுமாய்வந்தான்
யெதிர்த்தஞ்சிவாடினேன் றனியே-அந்த
யெரிவிஷப்பாம்பின லவனுந்துயரமுற்ருன்
யெங்களேரெட்சிப்பீர் முனியே (உ)

யென்றிடமானுஷன் பேசுவேபேசுமோபன்றி
யேதையாஆய்ப்பாடி இடைச்சி-யென்று
எண்ணினீரோமுன்னே வஞ்சித்துவந்தாப்போல்
இப்போதும் வஞ்சித்துக்கிடைச்சீர் (ங)

நன்றிந்தவஞ்சத்தா லென்னபலனெங்களால்
நாடியெனக்குமுன்னீரே-இங்கே
நவின்றவரந்தருவீரென ஸத்யரிஷிசொல்ல
நாரணருமெதிரே னின்ருரே (ச)

கண்டுதக்ஷகனும் சாபமொழிந்துவிங்
கரஞகியேதுயர் தணிந்தான்-யெதிர்
காணும்புரூருவச் சக்ரவர்த்தியும்மனக்
களிப்போடுபோற்றியே பணிந்தான் (ரு)

புண்டரீகாக்ஷர்மா ஸத்யரிஷியைப்பார்த்துப்
புகழ்ஸனகாதிகள்போலே-நீயெப்
போதும்ஸாமீபமமே பெற்றிருப்பாயென்று
புகன்றருளினரே யன்பாலே (சு)

## விருத்தம்.

வருபுருஷோத்தமர்தக்ஷகனுக்குமுன்போல் வாசற்காப்பீந்துசத்யரிஷிதனக்கு
அருள்செய்துஸாமீபங்கொடுத்துப்புரூருவாவைஉன்மானஸாராதனேக்கே
கருணையாய்வரந்தரவாராகமாகிக்களிக்குமுன்னடில்துயரங்காட்டியுன்னே
வருவித்தோம்இந்தமகாஸ்தலத்தில்வேண்டும்வரங்கேளென்றிடமன்னன் [வழுத்துவானே

பதம் இராகம்-செஞ்சுருட்டி-சாப்புதாளம்.

பல்லவி.

தன்யனுனேன் ஸ்வாமி நானே — தன்ய

அநுபல்லவி.

உன்னைக்கண்டே உயர்ச்சிகொண்டே — தன்ய

சரணங்கள்.

வரமொன்றின்ன மற்றுமென்ன காங்குவித்தேகண்டரிசித்தே — தன்ய
பதம்படைத்த பலன்கிடைத்த யிதமுகந்தே யிங்குவந்தே — தன்ய
எனதுநாவி லினிதுமேவி உனதுபேரே ஒதினேரே — தன்ய
பக்தபரி பாலஹரி நித்யகித ரக்ஷணீத — தன்ய
பரமபத பாக்யயித வாமிதொன்றே வாஞ்சையின்றே — தன்ய

விருத்தம்.

ஸ்துதிசெய்புரூர்வஉனக்கு திவ்யக்ஞானம்தோன்றும்ஸத்யரிஷிபூ ஜித்த பிம்பம்
யிதுமூன்றுவருஷம் அன்யசிர்தைவிட் டிருந்தாராதனஞ்செய் யுந்தன்மை நந்தன்
பதியிதில்வந் திவ்வாலயத்தையேபிரா பல்யமாய்ச்செய்துபா ராளுவன்னீ
கதிபெறுவையென்றுஸத்யரிஷியோடுந்தட்சகனேடுந்திருமால்பாற்கட லுற்றுரோ

விருத்தம்.

ஸத்யகிரியிதில்வடவிர்க்ஷமூலத்தினில்
சித்தமேகாக்ரமாகத்தபஸேசெய்து
உற்றதிரூர்வச்சாத்திற்புரூர்வசக்ர
வர்த்தியடைந்தனன் முக்தியிற்றுனே

விருத்தம்.

சார்புரூர்வச் சக்ரவர்த்திதன்
சீருரைத்தனம் திகழ்தட்சகன்
பார்புகழ்ந்திடப் பகர்துர்வாஸரால்
நேருசாப நிகழ்ச்சியைஒதுவாம்.

ஆறுவது

புரூர்வோபாக்யானம்-

முற்றிற்று

ஆக திருவிருத்தம்-கஉ. கீர்த்தனம்-ஙு.

ஏழாவது

## தக்ஷகோபாக்யானம்.

விருத்தம்.

ஜெகஞ்சொல்காரதகேளெல்லாம் செப்பினேனின்னம்வேண்டிப்
புகன்றிடாயெனத்தேவேச புராந்தகதக்ஷகன்யார்
திகைந்ததுர்வாஸர் சாபஞ்செயப்பெறும் யேதுவென்ன
பகர்ந்திடுமெனவினவப் பசுபதி உரைக்கின்றாரே.

பதம் இராகம்-பியாகு ஆதிதாளம்.

பல்லவி.

தக்ஷகன்சரித்ரமிது தவமுனியேகேளிப்போது

அனுபல்லவி.

பக்ஷமாம்பாலாழிதங்கு பகர்சுமேத த்திபிலங்கு தக்ஷக

சரணங்கள்.

அரிமகாபுரத்திலிவன் ஆதிவாசல்காக்கிறவன்
ஒருநாள் துர்வாஸருந்தான் உயர்தி கம்பராய்வந்தார் தக்ஷக
வந்தரிஷிதன்னைக்கண்டு மனவிமேலதோசங்கைகொண்டு
அந்தப்புரத்துள்விடுக்க லாகாதென்றேதடுக்க தக்ஷக
ஸர்ப்பவென்றனங்கேநின்று ஸர்ப்பமாய்நீதான்போவென்று
அற்புதமுனிவர்சென்றார் ஹரியைஸேவித்துநின்றா தக்ஷக

விருத்தம்.

ஸர்ப்பமாகென யோகி சபித்திட
பொற்பகன்றிகழ் போயதாகினான்
அற்புதத்திருமாலடி போற்றியே
பற்பலஸ்துதி பண்ணியிறைஞ்சுவான்.

பதம் இராகம்-சுருட்டி-திரிபுடைதாளம்

பல்லவி.

தீனதயாள ஸ்ரீ கோபால

அநுபல்லவி

கானமுரளீகர கவுஸ்துபாத்னதா தீன

சரணங்கள்

ஸ்ரீ தாஜயானந்த ஜயலோகேசுவரேசுவா
மாதவயானுன்முதல் வாசல்காக்குங்கிங்கரன் தீன

திகம்பரராய்துர்வாசர் தேவரீரிடம்வந்தார்
தகைத்தேன்அதனலென்னை சர்ப்பமாக சாபந்தந்தார் தீன
முன்னுந்துவாரபாலரோர் முனிக்கஞ்சியேவிடுத்தே
மன்னுன்பகையாய் மூன்றுபிறப்புற்றதால்த்தடுத்தேன் தீன
உள்ளதீதபராதம் ஒன்றுமில்லையென்மெய்ய
என்னளவுமிங்கா திதுசெய்தாராள்விரய்ய தீன

விருத்தம்.

வளர்ந்தகோப மருவுதுர்வாசரால்
தளர்ந்துசர்ப்பம தாகியதக்ஷகன்
உளந்தயங்கி உரைத்திடக்கேட்டுமண்
ணளந்தமாயன் அருள்செய்துகூறுவார்.

பதம்-இராகம்-ஆரபி-ஆதிதாளம்.

பல்லவி

தக்ஷகனேயே சாற்றக்கேட்பாயே

அநுபல்லவி

இக்ஷணமேதுர்வாஸரிடத்திற் றுமேனசெல்வாயே தக்ஷகா

சரணங்கள்

அடுத்துரமதுவாசல் அதுகாத்தெப்போதும்
கிடைத்தபலமுள்ள கிங்காபுவிமீது
திடத்தபிர்ம்மாதியாந் தேவராணலும்
தடுப்பரோமுனிவர் சாபத்தையெக்காலும் தக்ஷகா
தத்வமுனிவர்சம தாக்ஞையைநேரே
நித்யம்பாலனஞ்செய்து நிலைநாட்டுவாரே
பக்திவலையில்நம்மை பவ்யஞ்செப்திடுவார்
சித்தத்திலேவைத்து தினமுங்கண்டிடுவார் தக்ஷகா
ஆதலாலவர்நாமே யாமெனஅறியாய்
தீதிதுயினிமேல்நீ தெரிந்துகொள்குறியாய்
வேதியரிட்டசாபம் வேதியராலே
யேதீரவேணும்அல்லால் யெவாதீர்ப்பர்மேலே தக்ஷகா
மதியணிந்தவனம்ச மாமுனிசொல்லுக்
கதிலங்கனஞ்செய்யனம் மாலில்லைச்செல்லு
கதியென்றடைஅவனைக் கருணை செய்திடுவான்
புதருதேசாபமினைப் பரிகரித்திடுவான் தக்ஷகா

விருத்தம்.

கேசவனிதுசொல்லக் கேட்டுமாயனை
நேசமாய்த்தரிசித்து நீங்கிவந்துதர்
வாசமாமுனி முதல்வாசலில்வர
மாசறுதக்ஷகன் வணங்கிச்சாற்றுவான்.

பதம்-லாவணி-இராகம்-சாப்புதாளம்.

பல்லவி.

சரணம் முனிநாதா யென்னைத் தர்க்காப்பது நீதான்

அநுபல்லவி.

உரகமெனப்பணித்தாய்-எந்தன் உயர்ச்சிதனைத்தணித்தாய் சரணம்

சரணங்கள்.

ஏதுசெய்வேன் சிறியேன் வெகு யேழைஒன்றுமறியேன்
போதமுள்ளநீயே பிழை பொறுப்பாய்பெரியோயே சரணம்

அய்யோநானோர்பேதை உமதருமை தெரியாதே
செய்தேனபாதம் இதில் சினஞ்செய்வதோநீதம் சரணம்

கொடிதாகியசாபம் இது கொடுத்தாயெந்தன்பாபம்
அடியேனைக்கண் பார்ப்பாய் சாப மதையின்று நீதீர்ப்பாய் சரணம்

விருத்தம்.

எங்கத்தட்சகன்றனையேவருஷம்நூறு யிச்சாபத்தொடுஸத்யகிரியில்மேவி
ஆங்குறையும்சத்யமுனிஸகவாஸத்தால் அகந்தமோகுணம் நீங்கும்புருருவுக்காய்
ஒங்குமால்தரிசனந்தந்திடுவானன்றே உன்சாபந்தீர்ந்திங்கேவருவாயென்று
தாங்குதவமுனிசென்றார்ஸர்ப்பமான தக்ஷகனும்ஸத்யகிரிசார்ந்திட்டானே

கண்ணிகள்.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

ஸத்யகிரியில்வந்து தக்ஷகன்ஸர்ப்பமாய்த்
தரித்தானங்கோர் குகையினுலாவி-வேத
சர்மாவெனுமறையோன் ஸ்ரீமதியெனுந்தேவி
தன்னுடன்வானப்ரஸ்தம்மேவி (௧)

நித்யம்வஸிக்குநாளில் அந்தணன்தபம்வந்து
நின்றார்போலொருசுதன்பெற்றா-னது
நித்திரைசெய்யுமிராவில் ஸர்ப்பமானதக்ஷகன்
நீங்காப்பசியினால்வந்துற்றான் (௨)

# திருபெய்யம் பெருமாள் கோவில்

வந்தக்குழந்தையை விழுங்கிப்பசியொழிந்து
வலிக்குந்தன்குகையினிற்சேர்ந்தான்-விடிந்த
மறுநாள்தன்சுதனைக் காணாமல்வேதசர்மா
மனைவியுடனேயேங்கிச் சோர்ந்தான் (௩)

சிக்னைதெளிந்து ஸர்ப்பம்விழுங்கியதென்று அடியால்த்
தெரிந்துசர்ப்பயாகம் புரிந்தே-அந்த
ஜெனமேஜெயன்போலே தீர்ப்பேனென்றாரம்பஞ்
செய்தான் விழித்தழல்சொரிந்தே (௪)

விருத்தம்.

ஆரம்பஞ்செய்துமந்திரோச் சாரணையால்மறையோன்
அடுவிலருடன்றானாக வாங்காரித்தோங்கி
வீரங்கொண்டேமகா சங்கற்பஞ்செய்ய
மெய்தபித்துத்தக்ஷகன்றான் விரைந்துவந்து
தீரங்கொண்டேஅக்னி சுவாலைவீசச்
சினந்தோங்குமுக்ரமந்திரத் தியானத்துற்ற
கோரங்கொண்டேநடுங்கித் தூரனின்று
கும்பிடுகையொடுவீழ்ந்து கூறுவானே.

பதம்-இராகம்-காபி. ஆதிதாளம்.

பல்லவி.

தீதேசெய்தேன் சிறியோன்றானே மிகத்
தீதேசெய்தேன் சிறியோன்றானே.

அநுபல்லவி.

பேதையென்பிழை பொறப்பாய்நீதானே தீதே

சரணங்கள்.

அன்றுதுர்வாஸராலே அலைந்தேன்பணியாகி
இன்றுன்னிளஞ்சுதனை உண்டேனேநான்துரோகி தீதே
வந்தகொடுமையான வயிற்றின்பசியின்கோரம்
எந்தன்மதிமயங்கி யேவந்ததபசாரம் தீதே
தெரியாமதியேனென்னைச் சிறுகோபாக்கினியாலே
யெரியாதேஉன்சிசுவை யீவேனிதோமுன்னாலே தீதே

விருத்தம்.

அஞ்சியதக்ஷகனிவ்வாறிரங்கிக்கூறி
அவன்விழுங்கும்புத்ரனையாங் குமிழ்ந்தேயீந்தான்
வஞ்சியொடுவேதியனற் புதமீதென்று
மகிழ்ந்துமுன்போலிருந்தசுதனைக் கைக்கொண்டான்

நெஞ்சிலுயர்தபமொழிந்து சிலநாட்சென்று
நெடுஞ்சாபந்தீர்ந்துமால் வாசலுற்றான்
கெஞ்சியதட்சகன்சரித முரைத்தோமேமுன்
கீதநாரதவென்றூர் கிரீசர்தாமே.

விருத்தம்.

முந்துதக்ஷகன், அந்தமோதினேம்
இந்திரத்விம்மன் முன், வந்ததோதுவாம்.

ஏழாவது
தக்ஷகோபாக்யானம்
முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-அ கீர்த்தனம்-சு

---

## எட்டாவது
# இந்திரத்விம்நோபாக்யானம்.

விருத்தம்.

அந்தகாந்தகதக்ஷகன்சரித்திரம் அதுநன்றாயருள்செய்தீரிந்திரத்விம்மனன்
வந்ததாய்முன்சொன்னீரதைவிரித்து வகுத்துரைப்பீரென்றுநாரதர்வினவ
அந்தணகேள்மகததேசராஜன் அவன் திக்குவிஜயஞ்செய்தகன்றுவந்து
இந்தமாஸ்தலம்ஜீர்ணோத்தாரணஞ்செய்திட்டானென்றதுபகர்வரீசர்தா
[னே.

பதம். இராகம்-தன்யாசி. சாப்புதாளம்.

பல்லவி.

இந்திரத்யும்னன் தானே திக்குவிஜயமேசெய்துவந்தானே

அநுபல்லவி.

எந்ததேசங்களும் புகழும்மகததேசன்
இயம்பும்நீதிதப்பாதே புவியாளும்ராஜன் இந்தி

சரணங்கள்.

கனத்தசேனைகள்சூழ தேசமன்னர் கப்பங்கட்டிவாழ
இனத்துடனெதிர்த்தோரை எண்ணருஞ்சராதாரை
யெய்துவந்தவர்பாரை யெல்லாங்கைக்கொண்டுநேரே இந்திர

வடதேசங்களெங்கும் ஜயித்துக்கொண்டு-வந்துதிராவிடர்தங்கும்
இடமாம்தென்தேசமிதி லேவந்துசுவேதநதி
எதிர்கண்டுதீர்த்தமதி லேஸ்நானஞ்செய்துஸ்துதி இந்திர
நித்யகர்மம்முடித்துத் தென்றிசைநோக்கி-நேரானவழிபிடித்து
பத்திரதத்தைநாடிப் பார்க்கக்காணமல்வாடிப்
பலதிசையிலுமோடிப் படர்வனமெங்குந்தேடி இந்திர

விருத்தம்.

இந்திரத்யும்னன்ரதங்காணுதமாயம் இதுதேவாசுரர்சூதோயேதோவென்று
சிந்தித்துச்செய்கையொன்றுந்தோணுகித் திகைத்துகிர்க்கும்போதுவிர்
[த்ததேகராகி
சந்தித்தா ரொருவிப்ரர்அவரைமன்னன் றுள்தொழுதுவிர்த்தரேதனித்த
[னீரார்
வந்திக்கானகத்தில்நிற்கும்ஹேதுவென்ன வகுப்பீரென்றிடச்சொல்வார்
[மறைவல்லோரே

பதம் இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

மன்ன நானிங்குவந்த வரலாறுகேளின்னள்

அநுபல்லவி.

பன்னர்மறை அறியேனய்யா பழங்கிழவனென்னமெய்யா மன்ன

சரணங்கள்.

திவ்யதேசமாமிது பூர்வ க்ஷேத்ரமெனதுதானே-யிதில்
சிறந்தமனையொன்றிடிந்தும்பிரிந்துஞ் சீர்ணமாமதில்நானே
தெய்வபலத்தாலிருக்கின்றேனதில் சீறுபாம்பின்கூட்டம்-மனத்
திடத்துடனிருக்கினுமோயாது தினந்தானவர்போராட்டம்
அவ்விசனத்தால்வந்தேன்னனே அனுதனும்அசக்திமானே
இவ்வுலகத்தில்ராஜராரும் எதிரில்லாமல்ஜயித்துநேரும் மன்ன
பெண்டொருஸ்த்ரீநீர்க்கிழுப்பவள் பின்பொருஸ்த்ரீ கரைக்கேபிடித்திழுப்
பவள்
இன்னமொருஸ்த்ரீ பேசுமவள்தன்னுரைக்கே அண்டயெவருமஞ்சுவர்-
யெனக்
கவதரித்தமூத்தவனே ஆண்பிள்ளையில்லைவெகுமுகன் அடுத்திட்டயிளைய
வனே
கண்டிடக்கண்ணற்காணக்கிடையான் காமியானபெரும்பெண்படையான்
உண்டோம்சிலநாள்கிழங்கும்காயும் உடுத்தோம்மரவுரியும் ஆயும் மன்ன

பத்துப்பேருடன்வதரித்தேன் பாரிலொருவனானேன்
பகினியொருதியுண்டென்று சிலர் பகருவர் அவள்தானே
பித்தனொருவன்றன்னையேனே பலவந்தமாய்க்கூடி
பிசைடியேற்றும் பேய்பிடித்தும் பிரிந்தான்கூத்தாடி
மைத்துனியவள்ஒருமூதேவி மறுத்தேனவளுறவையேவி
யித்தனைஉள்ளபடி யென்சரித்ரம் இனிமேல்தீருமே யென்தரித்ரம் மன்ன

விருத்தம்.

மறையவரேயும்துகுறை கேட்டேனென்யென்றன்
மனக்குறைநீர்கேளும்நாம் மகததேசத்
திறைவன் இந்திரத்யும்னன் எங்கும்வென்றுவந்தேன்
இமையவராலோ அசுரராலோயிங்கென்தேர்
மறையவெங்குந்தேடுகின்றேன் இதுவுமதுக்ஷேத்ரம்
மணிரதமுமும்மைவிட்டு மற்றெங்கும்போகா
நிறையுடனேவருவிப்பீர் நீரேயென்றிறைவன்
நின்றுரைக்கவேகேட்டு நிகழ்த்துவர்வேதியரே.

பதம் இராகம்-காபி சாபுதாளம்.

பல்லவி.

என்மனோரதமே நிறைவேற்றிடில் வரும்ரதமே

அநுபல்லவி.

உன்மனோவிசாரம்போலே உற்றதெனக்குமேமுன்னாலே என்

சரணங்கள்.

க்ஷேத்ரவானும்யானே உயர் க்ஷேத்ரக்ஞன்நீதானே
நேத்தியாம்தேவபூமியிதில் உன்தேர் நீங்கியது தேவமாயைகண்டேனே
தேவர்மந்திராதீனர் மந்த்ரஞ் செபிக்கும்பிராம்மணாதீனம் [என்
ஆமதால்மந்திர வித்தியாலிங்கே அழைப்பேனுன்றன் றேரைமேலான
வைதுகிரகமோஜீர்ணம் என்றும் என்மீதிலபிமானம்வைத்து [என்
தனமதுயர்ந்தமன்ன ஜீர்ணோத் தாரணஞ்செய்துவிர்த்தனை என்

விருத்தம்.

வேதியரீதுரைக்கயிருள் முன்னாதித்யன்
வியாதிமுன்னவழ்தம் தாரித்ரன்முன்
ஓதுநிதியெனத்தேவர் மாயைமுன்னே
உதயமானீர்தேரை அழைப்பீராயின்
சோதிமனை துலக்குவே னென்றுமன்னன்
சொல்லவொருமுகூர்த்தம்த்யா னிப்பார்போலே
நீதிசெய்துககனத்தி லழைத்தார்தேரை
நின்றமன்னனதிசயித்து ரேர்கண்டானே.

பதம் இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

கண்டானேதேரே ககனத்தில்நேரே

அநுபல்லவி.

எண்டிசைபுகழ்மன்ன னெனுமிந்திரத்யும்னன் கண்டா

சரணங்கள்.

ஆச்சரியமிதுவென்ன வானந்தமாய்நின்று
ஏச்சொழிந்ததுநமக் கிதுதெய்வச்செயலென்று கண்டா

சாத்தியபிராமணேத் தமரைநமஸ்கரித்து
ஏத்தியுமதுகிரக மெதுவென்றுபசரித்து கண்டா

ஸத்தியகிரியதுதன் ருழ்வரையிலபீஷ்டம்
உற்றகிரகம்நமதென் றுயர்ந்தவிர்த்தர்காட்ட கண்டா

கலித்துறை.

தேர்காட்டிக்காட்டித் திருவுருக்காட்டிய செல்வர்தம
தூர்காட்டியேமறைந் தார்மன்னன்சென்று புருகுத்ஸராம்
பேர்காட்டியமுனி முன்னம்நடந்தது பேசவவர்
கார்காட்டியதிரு மெய்யன்பெருமையைக் காட்டுவரே.

பதம் இராகம்-இந்துஸ்தானிதோடி ஆதிதாளம்.

பல்லவி.

இந்திரத்யும்னமன்ன சொல்வேன்கேளா யிந்நாள்
எதிரேயுன்தேர்காட்டி மறைந்தவர்தாமே

அநுபல்லவி.

அந்தமுயருமிந்த ஸத்யகிரிநாதரே அவரிருக்குமாலயமிதுவாமே இந்த்ர

சரணங்கள்.

மேதினிபுகழ்ஸத்யக்ஷேத்ரமிதுதபோ விர்த்திகாம்பரம்பக்தி
ஆதிசேஷன்சந்திரன் கருடன்ஸத்யரிஷி அருள்புரூருவசக்ரவர்த்தி இந்த்ர

கமலநயனன்வரை அறுவர்களர்ச்சித்துக் கதிபெற்றுஸ்தாபித்ததிதுவே
அமர்ஸத்யபுஷ்கரணியிது யிதன்தென்றிசையில் அமிர்தகிரணன்பூஜித்த
துவே [இந்த்ர

ததிவாமனமூர்த்தி சந்த்ரகாந்தச்சிலை தன்னலானததன்மேற்கு
அதுதானிந்தஸத்ய கிரியின்தென்குகையில் ஆதிசேஷனாதித்ததேற்கும்
[இந்த்ர

வரமருளும்சேஷ சயனமூர்த்திஸத்ய மலையின்சிகரமதன்மேலே
கருடப்பச்சையினல் பிம்பப்ரதிஷ்டைசெய்துகருடன்பூஜித்தானன்பாலே
[இந்த்ர

சேஷசயனமூர்த்தி திருவிருப்பின்கிழக்கில்ச் சிறந்தபத்ரவடச்சாயை
தோஷம்நீக்கும்ஸத்ய ரிஷிசித்ரசிலையிற்செய் ஸோமச்சந்தவிமானமேயே
[இந்த்ர

அவ்விமானத்துள்ளே சித்ரசிலையினாலே அமைந்ததிவ்ய மங்கள மூர்த்தி
திவ்யாலம்விமானம்மண்டபம்பிராகாரம்சிறந்தகோபுரங்கள்செய்தேற்றி
[இந்த்ர

ஸத்யரிஷிபூஜித்தார் பின்புபுரூர்வச் சக்ரவர்த்தியுமவன்மைந்தன்
பக்தியுள்ளகமலனயனனும் உத்ஸவப் ராபல்யஞ்செய்துவைத்தார்முந்த
[இந்த்ர

பின்புநூறுயுகம் ராக்ஷஸராலெவிந்தப் பெரும்புவிபீடிக்கப்பட்டுத்
துன்பமாய்தெய்வாலயங்கள் பிர்ம்மாலயங்கள் துலங்கவில்லையேயிந்தமட்டு
[இந்த்ர

இப்போதெழுந்துநீதிக்விஜயஞ்செய்யவே ராக்ஷதர்பயம்போச்சு
எப்போதும்போலே யெவ்வாலயங்களும் எந்தவிடங்களுமுண்டாச்சு
[இந்த்ர

இந்தக்ஷேத்ரத்தையும் ஜீர்ணோத்தாரணஞ்செய் திடுவையென்றுஉன்முன்
னாலே
வந்துவிப்ரரெனத் தரிசனந்தந்தாரிந்த மகிமையுள்ளதிருமாலே இந்த்ர
அன்பினாலேயுன்னைத் தடுத்தாட்கொண்டார் அதிகமாம்சுகிர்திநீயே
முன்புபோலிவ்வாலயத்தை நவீனஞ்செய்து முக்தனாதவாயே இந்த்ர

விருத்தம்.

புருகுத்ஸரிவைஉரைக்கயிந்திரத்யும்னன்புகல்கிராதகராலும்சிற்பாலும்
அருகுற்றவனங்கள்மிர்கங்களையும்நீக்கிஆலயத்தைப்பண்டுபோலாக்கி
நோக்கித்
தரிசித்துதிவ்யமங்களமாம்மூர்த்திதன்னைநமஸ்கரித்தானந்தபாஷ்பம்
சொரிவுற்றுபுளகாங்கனாகிநின்றுசொற்றமுதமுழுத்துவெகுஸ்துதிசெய்
தானே.

பதம் இராகம் பூபாளம்-ஆதிதாளம்.

பல்லவி.

நமஸத்யசைலவாஸ நமோரிஷிகேசா

அநுபல்லவி.

நமோவேத்யரூபா ஹரி நமோபத்மநாபா நம

சரணங்கள்.

ஸத்யசைலநாதாமம ஸத்யானுகூலஸர்வகுணா
ஸத்பனுமாஹரி ஸத்யரூபாசந்ததநாராயணா நம

அப்ரமேயஅனந்த்யந்தா ஆத்மபராத்பரானந்தா
அத்புதமுனிகணயிர்த்வாச ஹரியச்சுதானந்தா நம

சந்திரஸூர்யாக்னிநேத்ரா சந்திரசைலாசந்திரகாந்தா
சந்திரவாஸமுரளீகர சந்திரவதனசாந்தா நம

அனந்தாத்புததரிசனஹரி அனந்தயோகசயன
அனந்தசைலநாதஹரி அனந்தாப்ஜனயன நம

கருடாரூடகேசவாஹரி கருடத்வஜதேவேசா
கருடார்ச்சிதபாதாப்ஜா கருடசைலவாஸா நம

யேகசக்ராதார்ந்தஸ்தா யேகாக்ஷரயேகா
யேகார்ணவசயன ஹரி யேகாந்தவைபோகா நம

த்வயராஜசமாரூடா த்வயிதாத்வயிதபாதா
த்வயஜிஹ்வாதிபபரியங்க த்வஜேந்திரரக்ஷாதா நம

திர்யானந்தத்திர்யானன திர்யாத்மதிர்லோகேசா
திர்பாபக்ன திர்விக்ரம திர்தசார்ச்சிதனேசா நம

சதுர்ப்புஜசதுர்மூர்த்தி சதுர்வேதாதிபூஜிதா
சதுர்வர்க்கபலப்ரதாஹரி சதுரானனஸேவிதா நம

பஞ்சேந்திர்யகிரகணதிப பஞ்சபூதஜகத்கர்த்தா
பஞ்சஜன்மஸம்ஹாரா ஹரிபஞ்சாயுதஹஸ்தா நம

ஷட்குணஷடாதாரா ஷட்காலஸர்வேசா
ஷட்ரஸஷட்சாஸ்த்ரா ஹரி ஷடங்காஷட்கோசா நம

ஸப்தலோகஹித ஸப்தலோககுரு ஸப்தலோகாதாரா
ஸப்தகோடிமந்த்ரரூபா ஹரி ஸப்தோததிவஸ்த்ரதாரா நம

அஷ்டாக்ஷரஅஷ்டாங்கஹரி அஷ்டதிக்பாலரூபா
அஷ்டமூர்த்திஅஷ்டவித்தே அஷ்டகுணப்ரதாபா நம

நவக்ரகஸ்வரூபாஹரி நவரத்னதீபசரீரா
நவரஸமயநவத்வாரா நராப்தஜனதிகாரா நம

தசாவதாரதசதிக்வ்யாபக தசமுகஸம்ஹாரா
தசோத்தரதசாவரண தசாங்குலாகாரா நம

சதக்ர்துஸ்நேகா சததாரார்சிதஸ...ரதேவா
சதபத்ரசதசித்ர சதகிர்த்வாபாவா நம

ஸஹஸ்ரநாம ஸஹஸ்ஸராக்ஷ ஸஹஸ்ரார்க்கிரண
ஸஹஸ்ரபாதுஸஹஸ்ராஸ்த ஸஹஸ்ராப்ஜசரண நம

## விருத்தம்.

வருமாமன்னனிந்தவிதம் வழுத்தச்சங்கசக்ரதர
கெருடாரூடராய்விளங்கு கவுஸ்துபப்பருபல்யரத்னத்
திருமார்பினராய்ஸத்யகிரித் திருமால்பிரத்யக்ஷமதாகப்
பெருமானிந்திரத்யும்னமன்னன் பின்னுந்துதிசெய்துநின்றனே.

பதம் இராகம்-கரகரப்பிரியாசாபுதாளம்.

பல்லவி.

ஹரிகேசவபாவனநாமா ஹரி ஹரிகேசவபாவனநாமா

அநுபல்லவி.

கிரிநாயககிர்ஷ்ணராமா ஸத்ய கிரிநாயககிர்ஷ்ணராமா ஹரி

சரணங்கள்.

துரிதாஸுரதுர்ச்சனபஞ்சனஸ்ரீ ஸுகதாயக கோவிந்தானந்தா
கரிவராகுலமோசனு பவநாசனு
கருடகேதன வரவிசேஷ கமலலோசன கோபவேஷ ஹரி

வனசோபிதஹாரபுஜாசலஸ்ரீ வஸுதேவஸுகுமாரா தீரா
கனகவாஸவிராஜிதா முனிபூஜிதா
கனகிபாஸுரதேவதேவா ககனுதமகானுபாவா ஹரி

குசகுங்குமகோமளகோகுலஸ்திரீ கோலாகலாஜாலா லோலா
விஜயகோதண்டதாரணு ஜகத்காரணு
விபவசோபனகரப்ரதாபா விமலாதிவிராட்ஸ்வரூபா ஹரி

விருத்தம்.

ஸ்துதிசெய்யவேண்டும் வரமருளியேமறைந்தார்
துளபமால்முன்விப்ர விர்த்தராய்த்தோன்ற
எதிர்கண்டவிடமுனிஸந் நியென்றுதேர்காட்
டியவிடந்தேர்காட் டேரென்றுந்திவ்யதேசப்
பதியாக்கிவனமெல்லாம் நாடாய்நவீனப்
பதியென்றோர்பட்டணமுண் டாக்கியிருப்பாராள
அதிலுயர்தென்கோடிமன்னன் தன்னைஅபிவிர்த்தி
யாகவைத்திந்திரத்யும்னன் அரிபதமுற்றானே.

விருத்தம்.

அரியதவம்புரிந்தஸத்யரிஷிவந்திங்குஅன்றுசித்ரசிலாபிம்பமதிற்பூஜித்தான்
பெருதசாட்சுஷமனுக்காலத்தில்மேலோர்பேசுபத்தென்பானேடிருபத்
தெட்டாந், தருவைவஸ்வதமனுக்காலத்திலாகச்சதுர் யுகந்தொண்ணூற்றே
ழிக்கலியுகத்தோ, டிருநிலஞ்சொலிச்சத்யகிரியில்மாயன் எழுந்தருளியருள்
புரிந்தாரெவர்க்குந்தானே.

விருத்தம்.

ஆதிஸத்பம்சேஷன்மதிகருடன்சத்ய அருந்தவன்புரூருவச்சக்ரவர்த்தி
நீதிசேர்தக்ஷகன் இந்திரத்யும்னன் நிஜபக்தர்எண்மர்அஷ்டாட்சரமந்த்ரத்
தை
ஓதியேசத்யகிரிமாலைப்பூஜித் துயர்ந்தமுக்திபெற்றாரென்றுமையாட்கன்
பாம்
ஜோதியேகூறநாரதர்கேட்டன்று ஸ்துதித்துச்சென்றாரென்றார்ஸூதர்
தாமே.

# ருச +10 திருமெய்யம் பெருமாள் கோவில்

வாழிவிருத்தம்.

வாழிமாலமும் மாரிபொழிந்திட
வாழிஸத்யகிரி மால்மகிழ்ந்திட
வாழிதென்கோடி மன்னன்செங்கோல்மிக
வாழிசுப்ரமண் யன்கவிவாழ்கவே!

23:38, 2194
N30

எட்டாவது
இந்திரத்துய்ம்னோபாக்யானம்
முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௦. கலித்துறை ௧ கீர்த்தனம் எ.

---

ஆ உபாக்கியானம் அ-க்கு திருவிருத்தம் அஉ. கலித்துறை உ
கீர்த்தனம் ௬௩, ஆ கவி ௧௬௭.

---

திருமெய்யம் பெருமாள்கோவில்
ஸ்தலபுராணக்கீர்த்தனை.
முற்றுப்பெற்றது.

---

TAMIL NADU ARCHIVES LIBRARY
ACC. No.
9 DEC 1978
EGMORE, MADRAS
TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 4321
EGMORE, MADRAS-600 008

பாஸ்கரன் பிரஸ் காரைக்குடி-35-500-29.

பாஸ்கரன் பிரஸ்,

காரைக்குடி